Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 11 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 13 (24.03.2005) வியாழக்கிழமை இதழ்:176

## இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும்படி சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்க

# இந்திய உதவியை நாடுகிறார் ரணில்!

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுக்கவிருப்பதாக ஐ.தே.கவுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடையவிருக்கின்ற போதும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் கருத்துக்கணிப்பின் மூலம் தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கின்றார்.

கருத்துக்கணிப்பின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தைநீடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

எனினும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்களை கருத்திலெடுக்காத சந்திரிகா இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை எனத் தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சட்டத்தின் படி இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கத் தீர்மானித்துள்ளார்.

இதற்காகவே அடுத்த மாதம் எதிர்க்கட்சித் தலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய எம்.பிக்கள் கிழக்குக்கு விஜயம்!

ஐரோப்பிய நாடாளுமன்ற குழுவினர் நேற்றுக் கிழக்குக்கு விஜயம் செய்தனர்.

இந்தக் குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன், அங்கு அபிவிருத்திகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

அவர்கள் கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணரத்ன ஆகியோரைச் சந்தித்தனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் நீனா கில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கீதா ஆகியோர் சுவிஸில் ஐ.பி.சி. கலையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதை படத்தில் காணலாம்.

## இஸ்லாமிய மார்க்க அறிஞர் திடீரென நாடு கடத்தப்பட்டார்!

(கொழும்பு)

கடந்த இரு வாரங்களாக இலங்கையில் தங்கியிருந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞரான மௌலவி பி.ஜெயினுலாப் தீன் குடிவரவு குடியகல்வு திணைக் கள அதிகாரிகளால் நேற்று அதிகாலை நாடு கடத்தப்பட்டார்.

இவர் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று இஸ்லாமிய மாநாடுகளில் கலந்துகொண்டதோடு மார்க்க பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு – மருதானைஎல்பின்ஸ் டன் மண்டபத்தில் பிற மதத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை அகற்ற ஜப்பான் மேலும் நிதியுதவி!

நிலக்கண்ணி அகற்றல் திட்டத்தின்கீழ் இலங்கைக்கு மேலும் ஒருதொகை நிதியுதவியை ஜப்பான் வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஆவணப் பரிமாற்ற உடன்பாட்டில் ஜப்பானிய தூதுவர் அகியோ சூடா மற்றும் நிதியமைச்சின் செயலாளர் எம்.ஜெயசிங்க ஆகியோர் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

இதனடிப்படையில் ஜப்பானிய அரசாங்கம் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை புனர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. ஒருபோதும் விலகமாட்டாதாம்!

### சோமவன்ச அமரசிங்க சொல்கிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து எந்தக் காரணம் கொண்டும் ஜே.வி.பி. விலகமாட்டாதென அந்தக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நேற்று கண்டியில் மல்வத்த மகாநாயக்கரை சோமவன்ச அமரசிங்க சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

ஜே.வி.பி. தொடர்பான உண்மை நிலைப்பாடுகளை ஊடகங்கள் வெளியிடுவதில்லை. இந்த நாட்டில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜே.வி.பி. தெரிவித்து வருகிறது. அரசாங்கம் முன்வைக்கும் திட்டங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



இனி அரச யோகம் கிடைக்காதென்பது நல்லா தெரிஞ்சு போச்சு போல....!

## முரளிதரன் நாடு திரும்பினார்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நேற்று தனது மனைவியுடன் நாடு திரும்பினார்.

முரளிதரனின் திருமணம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்பு நிலையை மதிப்பிட மீண்டும் வருகிறார் கிளின்டன்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் விரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

சுனாமி அனர்த்த புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான ஐ.நாவின் தூதுவர்களாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான பில் கிளின்டனும் ஜோர்ஜ் புஷ்ஷும் கடந்த மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வந்திருந்தனர்.

இந்த விஜயத்தின் பின்னர் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் புனரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயவே பில் கிளின்டன் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்வாரென ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

பில் கிளின்டனின் வருகையைத் தொடர்ந்தே ஐ.நாவின் கிளைத் தொண்டர் நிறுவனங்களின் பணிகளை விஸ்தரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

### பொதுக்கட்டமைப்பு குறித்து

## நாடாளுமன்றுக்கு விளக்கமளிக்க கோருகிறது ஹெல உறுமய!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதற்காக – விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கப் படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR Your friend in the skies...

# யாழ். திறந்த வெளி அரங்கில் 57 மில்லியன் செலவில் மண்டபம்

## நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த வெளி அரங்கில் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும், காக்கை தீவுப்பகுதியில் உரத்தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் நேற்று மாநகர சபை ஆணையாளர் குணராஜா தலைமையில் நடைபெற்றது.

கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் 57 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கான அடிக்கல்லை நேற்று காலை 9.00 மணியளவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ் நாட்டினார்.

தொடர்ந்து காக்கை தீவுப்பகுதியில் நோறாட் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள உரத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லையும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாட்டினார்.

இந்நிகழ்வைத்தொடர்ந்து பொம்மை வெளிப்பகுதியிலும், சித்தி விநாயகர் ஆலயப்பகுதியிலும் புதிதாக அமைக்கப்பட்ட குடி தண்ணீர் விநியோக குழாய்களை அரச அதிபர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் யாழ். மாநகர சபை உயர் அதிகாரிகள், யாழ். செயலக சமூர்த்தி அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படைமாவீரர் நினைவாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக, தமிழீழ விளையாட்டுத் துறை யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் மற்றைய ஆட்டத்தில் ஏழாலை கண்ணகி அணியை எதிர்த்து கொற்றவத்தை சிவானந்த அணியும் மோதவுள்ளன.

# வாசகர் நோக்கு

## அரியாலை இலந்தைக்குளம் பாலம் திருத்தப்படுமா?

அரியாலை மாம்பழம் சந்நிதியிலிருந்து இலந்தைக் குளம் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வீதியில் உள்ள பாலம் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக இவ்வீதியால் செல்வோர் மிகவும் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டி இருக்கிறது.

பாலத்தின் நடுவில் பாரிய குழி ஒன்று காணப்படுவதால் இதனூடாக பயணம் செய்வோர் இரவு வேளைகளில் இதனூடாக செல்லும் பாதசாரிகள் குழிக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்துடன், விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன.

இந்த குழி ஏற்பட்டு மிக நீண்ட நாட்களாகியும் உரியவர்கள் எவ்விதமான திருத்த வேலைகளும் செய்யவில்லை. இதனால் இப்பகுதி மக்களாகிய நாம் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இவ் வீதியூடாக பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இந்தப் பாலத்தை திருத்த வேலை செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வராமை எமக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேவையற்ற விபத்துக்களையும் விபரீதங்களையும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுப்பார்களா?

*எஸ். அஜந்தன் அரியாலை*

# திணைக்களங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை 86வது சுதேச திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட திணைக்களங்களுக்கு இடையிலான 7பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்த உள்ளது. நொக்அவுட் முறையில் நடத்தப்பட உள்ள இச்சுற்றுப் போட்டயின் முதல் அரை இறுதி வரையிலான போட்டிகள் நாளை காலை 8.30 மணி முதல் அரியாலை சனசமுக நிலைய மைதானத்தில் நடைபெற உள்ளது.

8.30 மணி விற்பனை திணைக்களம் எதிர் தபால் திணைக்களம். 9.30 மணி கல்வி திணைக்கள வலயம் எதிர் சுகாதார திணைக்களம் 10.30 மணி திக்கம் வடிசாலை எதிர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை எதிர் கல்வியற் கல்லூரி 2.30 மணி மதுவரி திணைக்களம் எதிர் 8.30 மணி போட்டியில் வெற்றி பெற்ற அணி 3.30 மணி யாழ். கூட்டுறவுச் சங்கம் யாழ் எதிர் 9.30 மணி போட்டியில் வெற்றி பெற்ற அணி 4.30 மணி தபால் திணைக்களம் எதிர் 10.30 மணி போட்டியில் வெற்றி பெற்ற அணி 5.30 மணி மாநகரசபை யாழ்ப்பாணம் எதிர் 11.30 மணி போட்டியில் வெற்றிபெற்ற அணி. (58)

## வலைப்பந்தாட்டப் போட்டி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகம் கொடுத்து போட்டியில் பங்கு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (113)

# பனுவல் ஆய்வேட்டின் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழில் சமூகம் பண்பாடு தொடர்பான காத்திரமான உரையாடலை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பனுவல் என்ற ஆய்வேட்டினதும் காண்பியக்கலை மற்றும் பேறு தொடர்பான அறிவுசார் விடயங்களை உள்ளடக்கிய 'Artlab' என்ற இதழினதும் அறிமுக நிகழ்ச்சி நாளை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கலாநிதி சுபோதினி ரமேஷ் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்ச்சியில் பனுவல் முதலாவது இதழ் தொடர்பான எதிர்வினையை கலாநிதி என். சண்முகலிங்கனும் 'Artlab' தொடர்பான எதிர்வினையை இலக்கியச் செயற்பாட்டாளர் அ. யேசுராசா ஆகியோர் நிகழ்த்துவர்.

# யாழ். வலய மட்ட கிரிக்கெட் போட்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியால மைதானங்களில் நடைபெறவுள்ளன.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் எதிர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், 10.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில், 8.30 மணிக்கு மத்திய கல்லூரி எதிர் இந்துக் கல்லூரி, 10.00 மணிக்கு புனித ஜோசப் மகாவித்தியாலயம் எதிர் இடைக்காடு மகாவித்தியாலயம்.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகளும் இறுதிப் போட்டியும் கனகரத்தினம் மத்தி மகாவித்தியாலய மைதானத்தில் காலை 11.30 மணி முதல் நடைபெறவுள்ளது. (58)

## தவறிவிட்டது

நிதிமுருகன் இலட்சுமி ஆகிய எனது அடையாள அட்டையும் (புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம்), பயண அனுமதி அட்டையும் (இல. 26 ஜயன்கன்குளம், புத்துவெட்டுவான்) 22.03.2005 அன்று யாழ். பஸ்தரிப்பு நிலையத்திற்கும், நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து - நமது ஈழநாடு விளம்பரப்பகுதி, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

# கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் நடாத்தும் இசை பற்றிய கருத்தரங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைத்துறை மண்டபத்தில் இசைத்துறைத் தலைவர் செல்வி பா.நடராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் மௌனகுரு - 'ஈழத்து தமிழிசையில் வளர்ந்ததும் வளர்க்க வேண்டியதும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

# தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித்தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாருத்திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாக சபையினரின் அனுசரணையுடன் மன்றத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

## தேவை

பிள்ளையார் ஸ்ரோர்ஸ் நிறுவனத்திற்கு கூலியாட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். ஒஸ்மானியா, கஸ்தூரியார் வீதி, ஓட்டுமடம்.

T.P. 4590008 (1103)


# UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

The Chairman Tender Board University of Jaffna will receive sealed tenders from contractors with at least five years experiences being registered with ICTAD in Grade - M5 or above for Civil Engineering/ Buildings Construction works for Interior Decoration work for the Auditorium at Faculty of medicine, University of Jaffna Stage - I

Tender forms may be obtained from deputy Registrar/Administration University of Jaffna on producing valid registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter University of Jaffna until 21st April 2005.

*** Non - refundable deposit Rs. 3000/=

In addition an on demand security from any Bank acceptable to vice chancellor University of Jaffna, to be submitted for Rs. 200,000/= valid for minimum 120 days from the last date specified for accepting the tender.

Perfected tenders to be sent by registered post to reach the chairman tender Board, University of Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna on or before 27th April 2005 at 10.00 AM.

Tender forms may be inspected by the tenderers free of charge at the administration Branch of this University during office hours if necessary.

*Vice - Chancellor, University of jaffna. 23rd March 2005*

*P.O Box - 57, Thirunelvely, Jaffna.*

(C/3931)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ரவிகிருஷ்ணா, நதீஷா, ரம்பா நடித்த
சுக்ரன்
26 முதல் மாயாவி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

மனோகரா திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
மாயாவி
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சிம்பு (இருவேடம்) ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இன்று மட்டும் குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST (இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
26.3.2005 முதல் விஜயகாந் செந்தில் நடித்த நிறைஞ்ச மனசு
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
(சி-3859)


# 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய தந்தையார்

## உயர்திரு வே.க.ஏரம்பு

அன்புடையீர்!

23.02.2005 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்திற்குமுரிய தந்தை உயர் திரு. வே. க. ஏரம்பு அவர்களின் வீட்டுக் கிருத்தியம் 25.03.2005 வெள்ளிக்கிழமை அன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெறும்.

அவ்வமையம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து எமது தந்தையின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியாமையால் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு அனைத்து அன்புள்ளங்களையும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

*இங்ஙனம்*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி-3930)

# பொதுக்கட்டமைப்பில் 6 பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் கோருகின்றனராம்!

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்துக்குள்ளான வடக்கு - கிழக்கு பிரதேசங்களை புனரமைப்புச் செய்வதற்காக அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து செயற்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் - தமக்கு அதிகளவான அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்டமைப்புக்காக நியமிக்கப்படவுள்ள 11 பேர்களில் 6 பேரின் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்று விடுதலைப்புலிகள் நோர்வே அமைப்பினூடாக அரச சமாதான செயலகத்தைக் கோரியுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒன்றிணைந்த பொதுக்கட்டமைப்பு பற்றி நோர்வே அரசாங்கத்தால் கடந்த 17 ஆம் திகதி புலிகளுக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒன்றிணைந்த பொதுக்கட்டமைப்பு பற்றி நோர்வே பிரதிநிதிகளாலும், இரு தரப்புக்கும் ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி இந்தப் பொதுக்கட்டமைப்பில் 10 அங்கத்தவர்கள் அடங்கவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

அதில் விடுதலைப் புலிகள் 5 பேரும், வடக்கு - கிழக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் 3 பேரும், அரசின் பிரதிநிதிகளாக 2 பேரும் இடம்பெறவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், விடுதலைப் புலிகள் 11 பேரடங்கிய குழு பற்றியும் - அதில் தங்கள் பிரதிநிதித்துவம் 6 ஆக இருக்க வேண்டும் என்றும் கோரியிருப்பதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (தே 01)

# அமைச்சுக்களின் நிகழ்வுகளை கூட்டமைப்பு புறக்கணிக்கும்!

## சிவாஜிலிங்கம் தகவல்



(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்கும்வரை, அரசால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் புறக்கணிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறுகையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அரசும் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலான இந்தப் பொதுக் கட்டமைப்பை உருவாக்காமல், நிவாரணப் பணிகளை மேற்கொள்வது ஆற்றலை வீணாக்கும் செயல்.

எனவே, சுனாமி தொடர்பான அமைச்சுக்களின் எந்த அழைப்புக்களையும் இனிக் கூட்டமைப்பு ஏற்காது என்று அவர் மேலும் தெரிவித்தார். (01)

## மன்னார் பாலியல் வல்லுறவு சம்பவம்

# சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை

(மன்னார்)

தமிழகத்திலிருந்து திரும்பிய இளம் பெண்ணொருவர் தலைமன்னார் கடற்பரப்பில் மண்திட்டு ஒன்றில் வைத்து, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது தொடர்பான வழக்கின் - அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோதும், பிரதிவாதிகள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

கடந்த 4 ஆம் திகதி இந்தியாவில் கடல்வழியாக திரும்பிக்கொண்டிருக்கையில், பெண் ஒருவர் கடற்படையால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக, மன்னார் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து தலைமன்னார் கடற்படைத் தளத்தை சேர்ந்த 24 கடற்படையினரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த அணிவகுப்பு - கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்தபோதும், முறைப்பாட்டாளரான பெண் மன்றில் சமூகமளிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இந்த அணிவகுப்பு நடைபெற்றபோது, முறைப்பாட்டுப் பெண்ணும் மேலும் மூவரும் ஆஜராகினர்.

எனினும், அவர்களால் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிரதிவாதிகளை அடையாளம் காட்டமுடியவில்லை.

இதனையடுத்து, பொலிஸாரை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, மன்னார் நீதிவான் எம். என். எம். அப்துல்லா உத்தரவிட்டார். (01)

# நிவாரணப் பொருட்களைப்பதுக்கிய கூட்டுறவு ஊழியருக்குப் பிணைமறுப்பு!

(திருகோணமலை)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்தவருக்கு - பிணைவழங்க நீதிமன்றம் மறுத்தது.

நிவாரணப்பொருட்களை பதுக்கிய குற்றத்துக்காக ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கோமரங்கடவல கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த எஸ். பி குணதிலக என்பவர் இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்தார்.

இதைக்காரணம் காட்டி, அவரைப் பிணையில் விடுவிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை - திருகோணமலை நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நிராகரித்தார்.

தனது தீர்ப்பில் நீதிவான் கூறியதாவது -

இந்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்ளும் மோசடிகள் சம்பந்தமாக நடக்கின்ற சம்பவங்கள் குறித்து, மன்று மிகுந்த விழிப்புணர்வுடன் உள்ளது.

நடக்கும் சம்பவங்கள் குறித்தும், கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, வாயிருந்தும் ஊமைபோல இருக்க இந்த மன்று விரும்பவில்லை.

தன் வயிற்றுப்பாட்டுக்காக அரச சார்பான நிறுவனங்களிலிருந்து உணவுப்பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் - பொதுச்சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, இந்த நீதிமன்றத்தின் கரங்கள் இறுக்கப்பட்ட நிலையில் பிணை வழங்கப்படாமல் பல மாதக்கணக்கில் ஏழை எளியவர்கள் சிறையில் வாடுவதை, மன்று நேரடியாகவே கண்டு கொண்டிருக்கிறது.

ஏழைக்கு ஒருநீதியும், செல்வாக்குள்ளவர்களுக்கு ஒரு நீதியும் வழங்கப்படுமானால், மன்றின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடும் அபாயத்தை மன்று எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இந்த அவநம்பிக்கையைப் போக்கவேண்டிய பாரிய பொறுப்பு மன்றுக்கு உண்டு.

தன்வயிற்றுப்பாட்டுக்காக களவெடுப்பவனுக்கும், மற்றவர்களின் வயிற்றில் அடித்து மோசடிசெய்பவனுக்கும் இடையில் பாரிய இடைவெளியுண்டு என்பதை மன்று தெளிவுபடுத்தவிரும்புகிறது.

வேலியே பயிரை மேய்வது போன்ற நிலை பெருகிச் செல்வதை மன்று விரும்பவில்லை. இந்தச் செயல்கள் குறித்து கடுமையான அணுகுமுறையையே மன்று கொண்டிருக்க விரும்புகிறது.

எனவே குற்றத்தின் பாரதூரத் தன்மை, பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தராக உள்ள எதிரியின் பொறுப்பற்ற செயல் என்பவற்றை மன்று கருத்திற் கொண்டு, எதிரிக்கு பிணை வழங்குவது உகந்ததல்ல என்று தீர்மானிக்கிறது.

மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, மன்று பிணை விண்ணப்பத்தை நிராகரிக்கிறது என நீதிவான் கணேசராஜா தெரிவித்தார்.

## மின்சாரசபை மறுசீரமைப்பு

# அமைச்சரவை முடிவுசெய்தால் வேலைநிறுத்தத்தில் குதிப்போம்

## ஊழியர் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைத்தல் தொடர்பாக இன்று அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டால், வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்கபோவதாக மின்சார சபையின் ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும் என, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி காலக் கெடுவிதித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சரியான தொரு தீர்மானத்துக்கு வராத பட்சத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கவுள்ள 600 கோடி ரூபா கடனுதவி வழங்கப்பட மாட்டாது என அந்த வங்கி எச்சரித் துள்ளது.

எனினும், அந்த கடனுதவி பெறப்பட்டால் தற்போது 8000 கோடியாகவுள்ள மின்சார சபையின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என, மின்சாரசபை ஊழியர் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (01)

# தனியார்துறை ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வு தேவை!

## அரசிடம் கோருகிறது ஐ.தே.க.

தனியார் துறை ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

வடக்கு - கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாணசபை நிர்வாகங்களின் மூலமாக, வருமானத்தின் மீதான வரி 1 முதல் 5 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த வரி மூலம், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களும் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாவர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய றம்புக்வெல்ல -

நாட்டில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை. உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யுமாறு, ஐக்கிய தேசியக் கட்சி கோரவில்லை. எனினும், அந்தப் பதவி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறுவதாகவே அமைய வேண்டும் என்பதே தமது கட்சிக் கொள்கையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

# தனியார் மயமாக்கலுக்கு எதிராக போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி.பி!

அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த பேர்க் நிறுவனம் நடவடிக்கை எடுக்குமானால், அதனைத் தாங்கள் கடுமையாக எதிர்க்கப்போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பி. அனுப்பியுள்ள கடிதத்தில் - பேர்க் நிறுவனம் வெளியிட்டிருக்கும் விளம்பரங்களின் நோக்கமானது, அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதாக இருப்பின், அது ஐக்கிய ம்க்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முரணானதாகும். அதனால் இதனை ஜே.வி.பி. எதிர்க்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப் படமாட்டாது எனக் கூறப்பட்டது. எனினும், தற்போது பல்கலைக்கழகங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக எமது கட்சிக் காரர்களும், பொதுமக்களும் எம்மிடம் கேள்வியெழுப்புகின்றனர். இது குறித்து நாம் உங்களுடனும், கல்வி அமைச்சுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

இவ்வாறான நிலையில், பேர்க் நிறுவனமானது - அரச நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொள்ள, தனியார் முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவிக்கும் வகையிலான விளம்பரங்களை வெளியிட்டிருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என ஜே. வி. பி. அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜயந்த சில்வாவை கைது செய்யுமாறு பிடியாணை

(கொழும்பு)

மேல்மாகாண சபை உறுப்பினர் ஜயந்த சில்வாவைக் கைது செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இவர் நடந்துகொண்டார் என பொறளைப் பொலிஸார் செய்த முறைப்பாட்டை அடுத்தே நீதிமன்றம் இந்தப் பிடியாணையைப் பிறப்பித்தது.

# புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட ஐக்கிய நாடுகளின் தூதுவர் வருகை

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் - ஐ.நாவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிடுவதற்காக, ஐ.நாவின் மீள் கட்டுமானப் பிரதித்தூதுவர் எர்ஸ்கின்போலஸ் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பை வந்தடைந்தார்.

இவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி நகரான காலிக்குச் சென்று, மீள்கட்டமைப்பு பணிகளைப் பார்வையிட்டதுடன், அரசாங்கம் மற்றும் உதவிப்பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியதாக, ஐ.நாவின் அலுவலர் பிரெனன் ஜோன்ஸ் தெரிவித்தார்.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று இவர் இந்தோனேஷியா சென்றார்.

சுனாமியால் சேதமடைந்த பிரதேசங்களின் மீள்கட்டுமானம் தொடர்பான உதவிவழங்கலுக்கு, ஐ.நா தலைமைச்செயலகம் சென்றவுடன் தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் கொழும்பில் ஊடகவியலாளர் களுக்குத் தெரிவித்தார்.

# திட்டமிடல் குழு மூலமே அபிவிருத்திப் பணிகள்!

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் அழிவடைந்த பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளை - சகல தரப்பினரும் உள்ளடக்கப்பட்ட திட்டமிடல்குழு மூலம் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காகவே இந்தத் திட்டமிடல்குழு அமைக்கப்படவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள், நகர அபிவிருத்தி சபை, கடற்கரையோர பாதுகாப்பு அதிகாரி போன்றவர்களை இணைத்து அமைக்கப்படும் இந்தக்குழு - பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும். இந்தக் குழுவில் பிரதேசங்களின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படுவர்.

கரையோரத்திலிருந்து 100 மீற்றர் எல்லைக்குள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ சட்டவிரோத கட்டடங்களை அமைக்கும் அதிகாரம் நகர அபிவிருத்தி அமைச்சுக்குள்ளது. சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்படுவதற்கு அனுமதி அளிக்கப்படுவதனாலேயே, சேதங்கள் அதிகளவில் ஏற்படுகின்றன எனத் தெரிவித்தார்.

# வெற்றிக்காகப் போராடுவோம் இன்சமாம் உல் ஹக் கூறுகிறார்!



பெங்களூர் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிக்காகப் போராடும் என்று அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பெங்களூரில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்சமாம் தனது 100 ஆவது டெஸ்ட் போட்டியில் இன்று விளையாடக் காத்திருக்கிறார்.

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட்போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. பாகிஸ்தான் அணியை எப்போதும் யாரும் கணித்து விடமுடியாது. மொஹாலி டெஸ்ட் போட்டியில் யாரும் எதிர்பாராத வகையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் முன்னணி பெறும்வாய்ப்பை பாகிஸ்தான் கோட்டைவிட் டது.

ஒரு வேளை முதல் இனிங்சில் பாகிஸ்தான் முன்னணி பெற்றிருந்தால் ஆட்டத்தின் முடிவு வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

இந்தியாவுக்கு எதிராகக் கிடைக்கும் வெற்றி எப்போதுமே சவால் மிகுந்தது. என்னுடைய 100ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக வெற்றிஎன்பதை விட வேறு எதுவும் தேவையில்லை.

பாகிஸ்தான் பயிற்சியாளரான பொப் வூல்மரும் இதே கருத்தைக் கூறியுள்ளார். பெங்களூர் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி சிறப்பாக ஆடும் என எதிர்பார்க்கிறேன். இப்போதுள்ள நிலையில் ஆடுகளம் அதிகமாக கைகொடுக்கும் என்று நினைக்கிறேன். போட்டி தொடங்குவதற்குள் ஆடுகளத்தின் தன்மை மாறவாய்ப்பு இல்லை. கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் அனில் கும்ளே சிறப்பாக பந்து வீசினார் எனத் தெரிவித்தார்.

# கிரிக்கெட் போட்டியை பார்க்க முஷாரப் டெல்கி செல்கிறார்!



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியைக் காண பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் எதிர்வரும் 17 ஆம் திகதி புதுடெல்கி செல்லவுள்ளார்.

இந்திய -பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இந்தப் போட்டியைக்காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்திருந்தார். இதையேற்று அவர் ஏப்ரல் 17 ஆம் திகதி புதுடெல்கி செல்லவுள்ளார்.

புதுடெல்கியில் முஷாரப் ஏப்ரல் 17 ஆம் திகதி நடைபெறும் இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டியைக் கண்டுரசிப்பார்.

# வெங்கடேஷ் பிரசாத் ஓய்வு பெற்றார்!



கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக வெங்கடேஷ் பிரசாத் நேற்று முன்தினம் அறிவித்தார்.

கர்நாடகாவைச் சேர்ந்த மித வேகப்பந்து வீச்சாளரான இவர் 1994 இல் இந்திய அணியில் இடம்பெற்றார். நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் அறிமுகமான இவர்- 33 டெஸ்டில் 96 விக்கெட் வீழ்த்தியுள்ளார். 161 ஒருநாள் போட்டிகளில் 196 விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

35 வயதான பிரசாத் இனி பயிற்சியாளராகச் செயற்படப் போவதாகத் தெரிவித்தார். குறைந்தபட்சம் 50 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 100 விக்கெட் வீழ்த்தாதது, 2003 உலக கோப்பையில் வாய்ப்புக் கிடைக்காதது போன்றவை தனது கிரிக்கெட் வாழ்வில் தனக்கு வருத்தம் அளித்த விடயங்களாகப் பிரசாத் குறிப்பிட்டார்.

# பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட் மழையால் ஆட்டம் பாதிப்பு

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA



(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகவிருந்த உலகக்கிண்ண பெண்கள் கிரிக்கெட் போட்டியின் நான்கு ஆட்டங்களும் மழையால் பாதிக்கப்பட்டன.

ரெக்னிகோன் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகள் மோதும் போட்டி நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாட முன்னரே மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டு இருதரப்புகளுக்கும் தலா 3 புள்ளிகள் வழங்கப்பட்டன.

செஞ்சூரியன் மைதானத்தில் தென்னாபிரிக்க - அயர்லாந்து அணிகள் மோதும் ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 7 விக்கெட் இழப்புக்கு 204 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி துடுப்பெடுத்தாட ஆரம்பிக்க மழை வந்து குறுக்கிட்டது.

பிறிட்டோரியாவில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நியூஸிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களைப் பெற்றநிலையில் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது.





இலங்கை அணியை 116 ஓட்டங்களுக்குள் இந்திய அணி சுருட்டிய பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்து விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைப்பெற்ற நிலையில், மழை பெய்ய ஆரம்பித்ததால் இந்த ஆட்டமும் கைவிடப்பட்டது.

இதேவேளை இன்றைய ஆட்டங்களில் தென்னாபிரிக்காவை எதிர்த்து மேற்கிந்தியத் தீவுகளும், இந்தியாவை எதிர்த்து அயர்லாந்தும், நியூஸிலாந்தை எதிர்த்து அவுஸ்ரேலியாவும், இங்கிலாந்தை எதிர்த்து இலங்கையும் மோதவுள்ளன.

# முன்னணி வீரர்களைச் சேர்த்தாலேயே பிரைன் லாரா விளையாடுவாராம்!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் விளையாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் முன்னணி வீரர்கள் சேர்க்கப்பட்டால் மட்டுமே, தாம் விளையாடப் போவதாக நட்சத்திர வீரர் பிரைன் லாரா தெரிவித்திருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வதாகவோ, நிராகரிப்பதாகவோ லாரா அறிவிக்காததால் அணியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். இது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வட்டாரத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது, ஏற்கனவே ராம் நரேஷ் சர்வான் , கெயில், பிராவோ, ராம்போல், ஸ்மித், எட்வேட் ஆகியோருக்குத் தடை விதித்துள்ளது கிரிக்கெட் சபை.

இந்நிலையில் முன்னணி வீரர்களையும் சேர்த்தால்தான் விளையாடுவேன் எனக் கூறியுள்ளார் லாரா. அவரது யோசனையை கிரிக்கெட் சபை ஏற்கனவே நிராகரித்திருந்தது.

வரவுள்ள தொடரில் மிகச் சிறந்த அணி தேர்வு செய்யப்பட வேண்டும். தற்போது நிலவிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். அப்போதுதான் கிரிக்கெட்டின் மீது ஆர்வம் கொண்டுள்ள மேற்கிந்திய வீரர்களின் பெருமையையும் நம்பிக்கையையும் உயர்த்துவதாக அமையும் என்றார் லாரா.

# இங்கிலாந்து 'ஏ' அணியை பாகிஸ்தான் 'ஏ' தோற்கடித்தது



கொழும்பில் இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை ஏ அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்து ஏ அணியை 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

நேற்று கொழும்பில் சி.சி.சி. மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஏ அணி 23.4 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இங்கிலாந்து ஏ அணி சார்பில் அதிகபட்சமாக சோலங்கி 15 ஓட்டங்களை எடுத்தார். பாகிஸ்தான் ஏ அணி சார்பில் பந்துவீச்சில் யாசிர் அரபாத் 6 விக்கெட்டுக்களையும், றியாஸ் அப்ரிடி 3 விக்கெட்டுக்களையும், ஷாகிட் நசீட் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஏ அணி 24 ஆவது ஓவரில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 80 ஓட்டங்களை எடுத்துவெற்றிபெற்றது.

# சுனாமி நிவாரண கிரிக்கெட்; லண்டனுக்கு மாற்றப்பட்டது!

(லண்டன்)

கொல்கத்தாவில் நடைபெறவிருந்த 2 சுனாமி நிவாரணநிதி கிரிக்கெட் போட்டி லண்டனுக்கு மாற்றப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுவதற்காகக் கடந்த ஜனவரி மாதம் மெல்போர்னில் நடந்த முதல் ஒருநாள்போட்டியில் ரிக்கி பொண்டிங் தலைமையிலான உலக லெவன் அணி - கங்கூலி தலைமையிலான ஆசிய லெவன் அணியை தோற்கடித்தது. இந்தப்போட்டியின் மூலம் சுமார் 112 கோடி ரூபாய் நிதி திரட்டப்பட்டது.

இந்தநிலையில் 2 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் கொல்கத்தாவில் நடப்பதாகவிருந்த 2 ஆவது ஒருநாள் போட்டி கொல்கத்தாவில் இருந்து லண்டனுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்தப் போட்டியில் லாரா (மேற்கிந்திய தீவு), ஷேன் வோன் (அவுஸ்ரேலியா), முரளிதரன் ( இலங்கை), அண்டிபிளவர் (சிம்பாப்வே) போன்ற முன்னணி வீரர்கள் பலர் ஆடச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டு

## கோப்பாய் பிரதேச செயலக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் கழகம் சம்பியன்!

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் இந்த ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கு இடையேயான கரப்பந்தாட்டப் போட்டி ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் இடம் பெற்றது . இறுதியாட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் - 25:24 , 25:23, 23:25, 25:22 என்ற செற் கணக்கில் விக்னேஸ்வரா அணியை மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி கொண்டது.

இவ்விரு அணிகளும் அரை இறுதியாட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா அணி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணியையும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் பாரதி விளையாட்டுக் கழகத்தையும் வெற்றிகொண்டதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக வி.அப்புத்துரை, ஸ்ரீமுருகதாஸ், காந்தன் ஆகியோர் கடமையாற்றியிருந்தனர். இந்தப்போட்டி விளையாட்டு அதிகாரி சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

# தூஷ்ரா முறையிலேயே ஹர்பஜன் பந்துவீசுவார் பயிற்சியாளர் ஜோன் ரைட்



பெங்களூர் டெஸ்ட் போட்டியிலும் ஹர்பஜன் தூஸ்ரா முறையில் பந்து வீசுவார் என்று பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்தார்.

கொல்கத்தாவில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் தூஸ்ரா முறையில் பந்துவீசினார். சர்வதேச கிரிக்கெட் சபை இதற்குப் பிரச்சினை கிளப்பியிருக்கிறது. ஹர்பஜனின் இந்தப் பந்து வீச்சு முறை சர்வதேச விதிகளுக்கு அப்பாற்பட்டு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் நிருபர்களிடம் கூறுகையில் - ஹர்பஜனின் பந்துவீச்சு முறையில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் சர்வதேச விதிகளுக்கு உட்பட்டுத்தான் பந்துவீசுகிறார். பெங்களூர் டெஸ்ட் போட்டியில் தூஸ்ரா முறையில் ஹர்பஜன் பந்துவீசுவார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இந்தமுறையில் பந்து வீசவேண்டாம் என்று இந்திய அணியின் தரப்பில் அவரிடம் கேட்கப்படவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. ஹர்பஜன் டெஸ்ட் போட்டியில் பயன்படுத்தும் மிகச் சிறந்த ஆயுதம் இது. இந்த முறையில் பந்துவீச வேண்டாம் என்று நான் கூறமாட்டேன் என அவா மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒதுக்கிவிட்டு

# ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலேயே

# ஜனாதிபதி சந்திரிகா அக்கறையாகவுள்ளார்

## சி.கா.செந்திவேல் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமுடியாத ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தின் முதன்மை இடத்தில் எவ்வாறு அமர்ந்துகொள்வது என்பதிலேயே முழு அக்கறை செலுத்தி - அதற்கான வழிவகைகளைத் தேடுவதில் இறங்கி நிற்கிறார்.

சுனாமி ஏற்படுத்திய பேரழிவிலிருந்து வடக்கு - கிழக்கு மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய வகையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கியது பற்றியோ அன்றி பேசப்படாது கைவிடப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்கான இடைக்கால நிர்வாகம் பற்றியோ எந்தவித அக்கறையும் காட்டவில்லை என புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் 'சுனாமிக்குப் பின்னரான அரசியல்நிலை' எனும் தலைப்பில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

எல்லாவற்றிலும் இழுத்தடிப்பும், முன்னுக்குப்பின் முரணான பேச்சுமே ஆளும் தரப்பிலிருந்துவந்து கொண்டிருக்கிறது.

சுனாமி பேரழிவுக்குரிய வடக்கு - கிழக்கு புனரமைப்பு - புனர்வாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பு உரியவாறு உருவாக்கப்படுவதை ஜனாதிபதியோ அரசாங்கமோ முழுமனதோடு விரும்பவில்லை.

காரணம் யுத்தத்தால் ஏற்கனவே அழிவுற்ற வடக்கு - கிழக்கு மக்களும் மறுவாழ்வு பெற்று விடுவார்கள். பலமடைந்துகொள்வார்கள். அதன்மூலம் புலிகள் இயக்கமும் பயனடைந்து கொள்வார்கள் என்ற பேரினவாத அச்சமே.

இதேவேளை, உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்தி சுனாமி உதவித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பைக் கொண்டுவர இருப்பதாகக் கூறிக் கொண்டே காலத்தைக் கடத்திவருகிறார் ஜனாதிபதி.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்த்தரப்பில் இருந்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி, தனது அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை முழக்கிக்கொள்கிறது. ஜே.வி.பி தற்போதைய நாடாளுமன்ற ஆசனங்களைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் பேரினவாதக் கூச்சலைக் கிளப்பி வருகிறது.

அதேவேளை - ஜனாதிபதியுடன் முரண்பட்டுக்கொண்டு தாங்கள் மக்களுக்கான நேர்மையுள்ள அரசியல் சக்தி போன்று தோற்றங்காட்டவும் ஜே.வி.பி முன்னிற்கிறது.

இந்த நிலையிலேயே சர்வதேச நாடுகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்று தத்தமக்குரிய லாபங்களைப் பெற்றுக்கொள்ள சுனாமிப் பேரழிவைப் பயன்படுத்தியும் வருகின்றன.

யுத்தம் ஒன்று வருமோ என எதிர்பார்த்து ஏங்கி நின்ற வடக்கு - கிழக்கு மக்களுக்கு முற்றிலும் எதிர்பார்க்காத சுனாமிப் பேரழிவு பாரிய உடமை இழப்புக்களை ஏற்படுத்திவிட்டது.

வடக்கு - கிழக்கை மட்டுமன்றி தெற்கு - மேற்கு கரையோரங்களையும் சூறையாடிவிட்டது. ஒட்டுமொத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண அன்றாட உழைப்பாளர்களான மீனவர்களும், ஏனைய தொழில் செய்வோர்களுமாவர்.

சுனாமி பேரழிவால் கடும் பாதிப்புற்றவர்கள் சாதாரண மக்களாவர். ஆனால் அதன் மூலம் பயனடைந்தவர்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும், பணம் பொருள் சுருட்டும் அதிகார ஆதிக்க சக்திகளுமாவர்.

இனிமேலும் யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கிக்கொள்வதற்கு ஆளும் வர்க்க பேரினவாத சக்திகள், இதே அமெரிக்க - இந்திய போட்டியைப் பயன்படுத்தும் உள்நோக்கிலேயே செயல்பட்டு வருகிறார்கள்.

எனவே தமிழ் மக்களும் சரி, நாட்டு மக்களும் சரி - விழிப்புடனும், தூர நோக்குடனும் அரசியல் தீர்மானங்களைச் சரியான திசையில் முன்னெடுத்துச் செல்வதிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது எனத் தெரிவித்தார்.

## கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மாவையாதீன உட்பிரகார விக்னேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

காலை 10.30 மணிக்கு கும்பாபிஷேகம், மகாபிஷேகம் நடைபெற்று 12 மணிக்கு விசேட பூஜைகள் ஆசீர்வாதம் என்பவற்றைத் தொடர்ந்து பகல் ஒரு மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

## கமக்கார வங்கி திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் - கமக்கார வங்கி கடந்த 11 ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டது.

கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் வங்கியைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் விவசாய பெரும்போக உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (63)

# புங்குடுதீவுக்கான மின் விநியோகப் பணி இன்னும் ஒரு மாதத்தினுள் பூர்த்தியாகும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்துக்கு 24 மணி நேரமும் மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கான வேலைகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன.

புங்குடுதீவு பிரதேசத்துக்கான மின் விநியோகம் தொடர்பாக வேலணை மின்சார சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே மின்சார சபை அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

புங்குடுதீவுக்கான 24 மணி நேர மின்சாரத்தை வழங்குவதற்காக வேலணையிலிருந்து புங்குடுதீவு வரையிலான 13 கிலோமீற்றர் வரையிலான வீதியில் தூண்கள் நடப்பட்டு வருகின்றன.

இதற்கு 200 தூண்கள் தேவைப்படுகின்றன. எனினும் தூண்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

குறிப்பாக சிறிய தூண்களுக்கு இவ்வாறு பற்றாக்குறை நிலவுவதாக தெரிவித்த அவர், இதனால் மின் விநியோகப் பணிகள் தாமதமடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பகுதியில் கற்கள் அதிகமாதலால், தூண்கள் நடுவதற்காக கிடங்கு தோண்டுவது கடினமாக உள்ளது.

மேலும் சுன்னாகத்திலிருந்து வரும் உயர் அழுத்த மின்சார இணைப்பு காரைநகருடன் முடிவடைவதால்- காரைநகருக்கும், ஊர்காவற்துறைக்கும் இடையிலான பிரதான மின் கோபுரங்கள் இணைக்கப்படல் வேண்டும். அதன் பின்பு ஊர்காவற்துறைக்கும், வேலணைக்கும் இடையிலான மின்கோபுரங்கள் இணைக்கப்பட்ட பின்பே வேலணையிலிருந்து புங்குடுதீவுக்கு மின் விநியோகத்தை மேற்கொள்ளலாம்.

இந்தப் பிரதான மின்கோபுர இணைப்பு வேலைகள் முடிவுற்றதும், சுன்னாகத்திலிருந்து 24 மணிநேர மின்சாரத்தைப் பெறமுடியும்.

தம்மால் இயன்ற அளவுக்கு புங்குடுதீவு பகுதிக்கு மின்சாரத்தை வழங்கும் வகையில் துரிதமாக வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், இன்னும் ஒரு மாதத்தினுள் மின்சார விநியோகம் மேற்கொள்ளமுடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜன்னல் கம்பி உடைக்கப்பட்டு பணம், நகைகள் திருட்டு!

(திருநெல்வேலி)

திருநெல்வேலியில் வீட்டு ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 8 பவுண் பெறுமதியான தங்க நகைகள், பெறுமதி வாய்ந்த கைக்கடிகாரம், 8 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருநெல்வேலி - நாவலடி வீதியில் வசித்துவரும் த.இராமசாமி என்பவரது வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வீட்டுக் கேற்றைத் திறக்கச்சென்றபோது சூட்கேசும், உடுப்புகளும் வெளியே வீசப்பட்டிருந்ததைக் கண்ட வீட்டு உரிமையாளர் தமது வீட்டு சாமி அறைக் கதவைத் திறந்து பார்த்தபோதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது தெரியவந்தது.

தமது வீட்டில் இருந்த அலவாங்கு கம்பியை எடுத்தே ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்த திருடர்கள் சூட்கேசையும் வெளியே எடுத்துவந்து பொருட்களை திருடிச்சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். (63)

# கற்றல் உபகரணங்களை நீடோ நிறுவனம் வழங்கும்

(சாவல்கட்டு)

சாவல்கட்டு மாணவர் முன்னேற்ற நிலையத்தில் கல்வி கற்கும் சுமார் 200 மாணவர்களுக்கு நீடோ நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சாவல்கட்டில் சிறப்பாக இயங்கி வரும் மாணவர் முன்னேற்ற நிலையத்தின் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக - அங்கு கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், ஏனைய பயிற்சிப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கியதுடன், மாணவர்களுக்கு மேலும் தம்மாலான உதவிகளை வழங்குவதாகவும் நீடோ நிறுவனத்தினர் இந்த நிலையத்தினருக்கு உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (44)

# மாவிலி துறைமுகப் பகுதியில் மீன் பதனிடுவதற்குத் தடை!

நெடுந்தீவு மாவிலி துறைமுகப் பகுதியை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதுடன், அதனை மீறுவோர் மீது நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

வெளியூர்களிலிருந்து வந்து தங்கி நின்று தொழில் செய்வோரும் மற்றும் உள்ளூர் மீனவர்களில் சிலரும் துறைமுகப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மீன் பதனிடும் வேலையில் ஈடுபடுவதால், அகற்றப்படும் மீன்களின் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பயணிகள் பெரும் சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, பயணிகள் பாலத்தினூடான பயணிகள் படகுசேவை நேரத்தில், மீன் ஏற்றும் வேலையும் இடம்பெறுவதாலும் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதால் அந்த நடவடிக்கையும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவே இந்த நடவடிக்கையை நெடுந்தீவு பிரதேசசபையினர் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது. (113)

## கால்வாய் ஆழமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் - நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கல்வியங்காடு வடிகால்வாய் ஆழமாக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகளை நல்லூர் சங்கிலியன் தோப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மேற்கொண்டு நிறைவுசெய்துள்ளனர். (63)

# நெடுந்தீவு பிரதேச மக்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தில் கியூமெடிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் அசெம்ளி ஒப் கோட் (தேவசபை) அமைப்பால் மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக தேவசபை அங்கத்தவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வரும் காலங்களில் ஏனைய வறிய குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இம்முதற்கட்டத்தில் வெளியிணைப்பு இயந்திரப் படகு 05, வெளியிணைப்பு இயந்திரம் 05, 10 தொகுதி கொண்ட மீன்பிடி வலைகள் 17 என்பன இதுவரைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஒருவருக்கு சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கிடைத்துள்ளன. மேலும் 05 படகுகளும், 07 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச தேவசபை போதகர் எஸ்.பன்னீர்ச்செல்வம் தெரிவித்தார். (113)

# படகு திருத்தும் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பிரதேசத்தில் இன்னுமொரு படகு திருத்தும் நிலையம் திறந்துவைக்கப்படவுள்ளது.

எஸ்.ஜே.பிஸ்சிங் இன்டஸ்ரீஸ் நிறுவனம் இதுவரை யாழ்.மாவட்டத்தில் நான்கு படகு திருத்தும் நிலையங்களைத் திறந்துவைத்துள்ளது.

5 ஆவது நிலையத்தை வல்வெட்டித்துறையில் திறந்துவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிகண்டியில் திறந்துவைக்கப்பட்ட நிலையம் கரையோரத்தில் இருப்பதால், அதனை இடமாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)



கொமர்ஷல் வங்கியின் ஆதரவுடன் கொக்குவில் இந்துக்கல்லூரியில் யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் நடத்திய கண்காட்சியை கொமர்ஷல் வங்கி முகாமையாளர் ரவீந்திரா பார்வையிடுவதை முதலாவது படத்திலும், பாடசாலை மாணவிகள் பார்வையிடுவதை மற்றைய படத்திலும் காணலாம். (படங்கள் - ஜெ.ஜெயராட், வர்மன்)






# மனிதனுக்கு உணவு மாடுகளுக்குத் தீவனம்

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கும், உழைப்புக்கும் ஏற்ற சத்துள்ள உணவுப் பண்டங்கள் தேவைப்படுவது போல, மாடுகளின் உயிர் வாழ்க்கைக்கும், உழைப்புக்கும், உற்பத்திக்கும் ஏற்ற தீவனங்கள் - தீனிகள் தேவைப்படுகின்றன.

மாடுகள் உயிருடன் இருக்கும் வரையில் - சுவாசித்தல், இரத்த ஓட்டம், ஜீரணித்தல், நடத்தல், கிடத்தல் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை மாடுகளின் 'உடலியல் தொழில்கள்' என்று கூறலாம். இந்த உடலியல் தொழில்களுக்கு உட்கொள்ளப்பட்ட தீவனத்தில் ஒரு பகுதி செலவாகிறது.

மாடுகளின் வகையில் - பால் மாடுகள் உற்பத்தி தொழில் எருதுகள், உழைத்தல் கன்றுகள் - வளர்ச்சி நடைபெறுகின்றன. இவற்றுக்கு உடலியல் தொழிலுக்குத் தேவையானது போக, மிஞ்சிய தீனிப்பகுதி வீணாகிறது. எனவே இவை எல்லாவற்றுக்கும் ஏற்ற அளவிலும் தேவையான அளவிலும் தீனிகள் இட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு தீவனம் இடப்படும் போது தான் சிறந்த பயன் கிடைக்கும். குறிப்பிட்ட அளவுக்கும் மேலதிகமாக மாடுகள் தீனியை உட்கொண்டாலும், அது பயன்படாமல் சாணமாக வெளியேறிவிடும் அல்லது வேண்டாத சதையும், கொழுப்பும் உடம்பில் ஏறும். அவ்வாறு இவை உடலில் ஏறும் பொழுது உற்பத்தி குறையத் தொடங்கும். பால் மாடுகளின் பாலும், எருதுகளின் இழுவைச் சக்தியும் குறையத் தொடங்கினால், வருவாய் குறையும். அதேநேரம் தீவனச் செலவும் அதிகமாகும்.

எனவே மாடுகளின் நிலையறிந்து அவற்றுக்குத் தேவையான அளவில் தீவனங்கள் இடுவதற்குத் தீனிகள் தேவையாகும்.

மாடுகளின் தேவைக்குக் குறைவாகத் தீனிகளை இட்டாலும், உற்பத்தி அளவும், உழைப்பின் அளவும் குறையும். வருமானமும் குறையும். எனவே அதிகளவில் வருவாயை அடைவதற்கு ஏற்றளவில் மாடுகளுக்குத் தேவையான தீவனங்களை இடுதல் வேண்டும்.

**தீவன வகை**

மாடுகளுக்கு இடுவதற்குரிய தீவனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன -

*பச்சைத் தீவனம்*
*உலர்ந்த தீவனம்*
*கலப்புத் தீவனம்*

இந்த மூன்று வகைத் தீவனங்களையும் மாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**பச்சைத் தீவனம்**

பச்சைத் தீவனம் என்பது - பசுமை மாறாத தீவனமாகும். பச்சைப்புல், சோளப்பயிர், பச்சைக் கடலைக்கொடி, பச்சைப் பயிற்றங்கொடி, பச்சை இலைகள் முதலியவை பச்சைத் தீவனமாகும். இவை பால் கறக்கும் மாடுகளுக்கும், உழும் மாடுகளுக்கும் மிகவும் ஏற்றவையாகும்.

இந்தப் பச்சைத் தீவன வகைகள் அனைத்தையும் ஒருவரால் மாடுகளுக்குப் போட முடியாது. எனவே அவரவர் தமக்குள்ள வாய்ப்பு வசதிகளுக்கேற்ப ஒன்று அல்லது இரண்டு வகைகளை உற்பத்தி செய்து அல்லது வேண்டி மாடுகளுக்கு அன்றாடம் போட்டு வரலாம்.

நிலவசதி உள்ளவர்கள் தங்கள் நிலத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியை - ஒரு ஏக்கர் அல்லது அரை ஏக்கர் நிலத்தைப் பச்சைப்புல் வளர்வதற்கென்று விட்டு விடலாம்.

இந்தத் தீவனம் புல் வளர்கின்ற நிலப் பகுதியை சிறுசிறு பாத்திகளாக அமைத்துக்கொண்டால், புல் வளர்ச்சியைக் கவனிக்கவும், தண்ணீர் பாய்ச்சவும், அறுத்துக் கொண்டு வரவும் வசதியாக இருக்கும். இந்தத் தீவனப் புல் பாத்திகளிடையே சில அகத்தி மரங்களையும் வளரச் செய்யலாம்.

அகத்தி மரங்களால் புல்லின் வளர்ச்சி சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. பாதிக்கப்படாமல் இருப்பதுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெட்டுவதன் மூலம் நிறைய அகத்தித் தழைகளும் கிடைக்கும்.

இது மாடுகளுக்கும் மட்டுமல்ல, மனிதருக்கும் சிறந்த உணவாக அமையும். மேலும் அகத்தி மரமுள்ள இடத்தில் புல் கூடுதலாக வளர்வதைக் காணலாம்.

பச்சைத் தீவனங்களின் அறுவடைக் காலங்களில் அவற்றின் இலைகள், கொடிகள் போன்றவற்றை மாடுகளுக்குத் தீவனமாக இடலாம். இவையெல்லாம் ஒரே காலத்தில் அறுவடை செய்யப்படுபவையல்ல.

ஒவ்வொரு காலத்திலும் அடுத்தடுத்து அறுவடையாகும்.

எனவே இவை தொடர்ந்து மாடுகளுக்குப் பச்சைத் தீவனமாகப் பயன்படும்.

(தொடரும்...)

# கரட் உற்பத்தி



இந்தப் பயிரின் உயர் கரட்டீன் கொண்ட வேர்ப்பகுதியே உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. தாழ்நிலப் பிரதேசங்களில் சில கரட் இனங்களைப் பயிரிடும்போது, நிற மாற்றம் ஏற்படுவதால், சிபாரிசு செய்யப்பட்ட இனங்களை மட்டுமே நடுகைக்குத் தெரிவுசெய்ய வேண்டும். உஷ்ணப் பிரதேசங்களில், பெரும்போக காலத்திலேயே தரமுயர்ந்த அறுவடையைப் பெற்றுக் கொள்ளலாம்.

***தரை தயாரித்தல்***

தனிப்பயிராகப் பயிரிடும்போது, ஒரு மீற்றர் அகலமான மேடைகளை அமைத்தல் வேண்டும். மண் ஆழமாகக் கிளறப்பட்டு, மேடைகளின் மேற்பகுதி நன்றாக தூர்வையாக்கப்படுதல் வேண்டும். கலப்புப் பயிராகப் பயிரிடும்போது, மேடைகளில் கரட் பயிரை முதற்பயிராகப் பயிரிடுவதற்கு ஏற்றவாறு நடுகையை மேற்கொள்ள வேண்டும்.



***இனங்கள்***

- றொப் வெயிட்
- கேப் மாக்கட்

ஏனிறினிற்றா (திருந்திய) - விதைகள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

***நடுகை***

இதனைத் தனிப்பயிராகவோ அல்லது லீக்ஸ், பீற்றூட் போன்றவற்றுடனோ கலப்புப் பயிராகப் பயிரிடலாம். சாதாரணமாக விவசாயிகள் கரட் பயிரை வீசி விதைக்கவே விரும்புகிறார்கள்.

எனினும், 20 - 30 சென்றிமீற்றர் இடைவெளியுள்ள வரிசைகளில் விதைப்பதனால், ஒழுங்கான பயிர் வளர்ச்சியைப் பெறலாம். அத்துடன் தோட்டத்தைப் பராமரிப்பதற்கும் இலகுவாக இருக்கும்.



விதையளவு 1.5 கிலோ கிராம்/4 ஆயிரம் சதுர மீற்றருக்கு, இந்த விதைகள் மிகச் சிறியதாக இருப்பதனால், விதைப்பதற்கு முன் மண்ணுடன் கலக்கவேண்டும். வரிசையில் மேலதிகமாகக் காணப்படும் பயிர்களை 5 சென்றிமீற்றர் இடைவெளிவிட்டு, ஐதாக்கிக்கொள்ள வேண்டும். வீசி விதைக்கப்பட்ட பயிர்களையும் நெருக்கமுறாதவாறு ஐதாக்கிக் கொள்ளவேண்டும்.

***பசளைப் பிரயோகம்***

நடுகையின்போது, 16 - 20 - 12 உரக் கலவையில் 250 கிலோகிராம் வீதம் 4 ஆயிரம் சதுர மீற்றருக்குப் பிரயோகிக்கவும். விதைத்து 4 - 6 வாரங்களின் பின், 30 - 0 - 20 உரக்கலவையில் 150 கிலோ கிராம்/ஏக்கர் வீதம் பிரயோகிக்கவேண்டும்.

(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 25/= | 35/= | 40/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 15/= | 10/= | 30/= | 15/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 55/= | 60/= | 60/= | 70/= | 60/= | 80/= |
| கத்தரிக்காய் | 30/= | 30/= | 30/= | 20/= | 30/= | 25/= | 25/= |
| பாகற்காய் | 40/= | 30/= | 40/= | 25/= | 30/= | 40/= | 40/= |
| கரட் | 35/= | 35/= | 40/= | 20/= | 25/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 15/= | 20/= | 30/= | 15/= | 20/= | 20/= | 30/= |
| முருங்கைக்காய் | 320/= | 250/= | 300/= | 300/= | - | 300/= | 200/= |
| வெங்காயம் | 30/= | 25/= | 30/= | 30/= | 30/= | 30/= | 50/= |
| பச்சை மிளகாய் | 40/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= |

## தொழில்மலர்

# ஒரு நிறுவன வெற்றி அதன் நிர்வாகிகளிலும் தங்கியுள்ளது

ஒரு நிறுவனத்தின் நிர்வாகிகளிலேயே அந்த நிறுவனத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆனால், சில தொழில்



நிறுவனங்களில் நிர்வாகிகள், தமக்குக் கீழ்ப் பதவிகளில் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுபற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். இதன் விளைவாகத் தங்களின் பணியாளர்களுடைய தயவில் அவர்கள் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் என்ன நடைபெறுகிறது என்பது விபரமாகத் தெரியாத காரணத்தால், அந்த அமைப்பு முழுவதுமே ஒரு கட்டுக்கோப்பின்றி திறமையற்றதாக ஆகிவிடுகிறது.

இதன் விளைவாக சேதாரம், நாணயமின்மை, தேவையற்ற சண்டைகள் போன்ற விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டு, வளர்ந்து பெருகிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மாறாக, மேற்கத்தைய நாடுகளில் தொழில் வர்த்தக நிர்வாகிகள் ஒரு நிறுவனம் இயங்கும் விதத்தின் எல்லா அம்சங்களையும் பரிசீலித்து, அதன்பின்னரே, நிர்வாகப் பொறுப்பை ஏற்படுத்துகின்றனர். இதனால் தக்க தருணத்தில் குறைகளைக் கண்டறிந்து, களைய முடிகிறது.

நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் எல்லோர் மீதும் உறுதியான கட்டுப்பாடும், மேற்கொள்ளும் வேலை பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பதும், பல நிறுவனங்கள் திறமையாகத் திட்டமிட்டபடி செயற்படுவதற்குக் காரணமாக உள்ளன.

பாடசாலை அல்லது பல்கலைக்கழகப் படிப்பை முடித்ததுமே பல இளைஞர்கள் முன் அனுபவம் எதுவுமின்றி, தொழில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாகத் தொழில் தோல்வி, நட்டம் மேலும் பல்வேறு விதமான தொழில்சார் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். ஆனால் சிலர் வேறுவிதமாக இருக்கிறார்கள். ஒரு தொழிலின் ஆரம்பப்படி நிலைகளில் ஊழியர்களாகச் சேர்ந்து, படிப்படியாக முன்னேறி, தொழில் வெற்றியாளர்களாக மாறுகிறார்கள்.

பத்திரிகை உலக நெப்போலியன் என்று போற்றப்பட்ட நார்த்கினிஃப் பிரபு காலமான போது, 100 செய்தித்தாள்களையும், பத்திரிகைகளையும் கொண்ட ஒரு பெரிய பத்திரிகை சாம்ராச்சியத்தின் தலைவராக இருந்தார். ஐந்தரைக்கோடி பிரதிகள் விற்பனையான டைம்ஸ் பத்திரிகையும் இதில் அடங்கும். இத்தகைய சாதனையாளர் தமது வாழ்வைத் தொடங்கியது அச்சுக்கோப்பவராகவும், பத்திரிகைகளை கூவி விற்பவராகவும் தான். இவர் அரசுகளை ஆக்கவும், அழிக்கவும் வல்லவராகத் திகழ்ந்தார். முதலாம் உலகப் போரின்போது, அமெரிக்காவில் பிரதமராக இருந்த ஆஸ்க்வித்தைப் பதவி விலகச்செய்து லொயிட் ஜோர்ஜைப் பதவிக்குக் கொண்டு வந்தவர். இதனால் தான், லொயிட் ஜார்ஜ் தமது வரவு- செலவுத் திட்டத்தைப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்பு இவரிடம் கலந்தாலோசிப்பது வழக்கம். அவர் அவ்வளவு செல்வாக்கு மிக்கவராக இருந்தார்.

இதேபோல் அமெரிக்காவில் எலக்ட்ரோனிக் கொம்பியூட்டரைத் தயாரிக்க விரும்பிய ஒரு இளைஞன், அந்தத்துறை பற்றிய எல்லா விபரங்களையும் முதலில் கற்றுத் தேர்ந்தார். இன்று உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றாக இது திகழ்வதில் வியப்பொன்றும் இல்லை.

ஆனால், இங்கு படிப்பை முடித்ததுமே பெற்றோர் தொழில் திட்டம் ஒன்றையும், அதற்கான மூலதனத்தையும் அவர்களிடம் கொடுத்து விடுகின்றனர். உதாரணமாக - ஒன்றைச் சொல்ல லாம்.

ஒரு பெரிய வியாபாரி தமது மகன் புகழ் பெற்ற பாடசாலையில் படிப்பை முடித்ததுமே ஏராளமான பணத்தைக் கொடுத்து ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கச் சொன்னார். பத்திரிகைத் துறையில் அவரது மகனுக்கு இருந்த அனுபவம், பாடசாலை சஞ்சிகைகளில் கட்டுரை எழுதியதும், கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை நடத்தியதும்தான். தன்னுடைய எழுத்தாற்றலில் மாபெரும் நம்பிக்கைகொண்ட அவன், கட்டுரை எழுதுபவர்களுக்குச் சன்மானமாகப் பெருந்தொகையை அளிக்க முன் வந்தான். பத்திரிகையைத் தொடங்கி ஒரு வருடத்தில் காலூன்ற முடியாமல் மிகப் பெரும் நட்டத்தை ஏற்படுத்திவிட்டு, அந்தப் பத்திரிகை நின்றுவிட்டது.

எனவே, எந்தப் பணியானாலும், பணியாளர்கள் தங்கள் வேலை பற்றிய முழு விபரங்களையும் தெரிந்துகொள்வது நல்லது. எடுத்தவுடனேயே குளிர்சாதன அறைக்குள் அவர்கள் புகுந்து கொண்டுவிட்டால், வெளியே என்ன நடக்கிறது என்றே தெரியாது. எனவே எந்தளவுக்கு அதிகமாகவும், ஆழ்ந்தும் ஒருவரது அனுபவம் இருக்கிறதோ, அந்தளவுக்கு அவர் மிகச் சிறந்த நிர்வாகியாக இருக்கமுடியும் என்று, நிச்சயமாகக் கூறலாம்.

முன்பின் அறியாத ஒன்றில் காலடி வைப்பதைவிட, தன் காலடியில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது பத்திரமானது. புத்திசாலித்தனமானது.

ஆகவே ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கும், நிர்வாகிகள் தங்களுடைய நிறுவனம் தொடர்பான சகல விடயங்களையும் தெரிந்து வைத்திருப்பது, அந்த நிறுவனத்தின் வெற்றிக்கு வழிகோலும்.

## தொழில் வங்கி

| நிறுவனம் | வெற்றிடமாக உள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | விண்ணப்ப முடிவு திகதி |
|---|---|---|---|
| சுனாமி உதவிக்குழு வட்டுக்கோட்டை. | திட்டமிடல் அலுவலர் வடக்கு - வட கிழக்குப் பிரதேசம் | 1.சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பு டிப்ளோமா. 2. திட்டமிடல் முகாமைத்துவத்தில் முன் அனுபவம். 3. கணினி அறிவு. | 31.03.2005 |
| ஒக்ஸ்பா (F) ம் | 1. திட்டமிடல் அலுவலர் (ஜென்டர், கொழும்பு) | 1.சமூக விஞ்ஞானத்தில் உளவியல் சட்டம் சார்ந்த ஏதாவதொரு துறையில் பட்டதாரி அல்லது அதறகு இணையாக அரசசார்பற்ற துறையில் 2 வருட அனுபவம். | 28.03.2005 |
| | 2. மனித வள அலுவலர் (திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை) | மனிதவளம் சார்ந்த பட்டறிவு. | |
| | 3. தொடர்பாடல் அலுவலர் (மட்டக்களப்பு) | 3வருட தொடர்பாடல் துறைசார் அனுபவம். | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

## சுயதொழில்

# சீமெந்து புளொக்குகள் (கல்) தயாரித்தல்

நகரப்புறங்களில் சீமெந்து புளொக்குகளுக்கான கேள்வி அதிகம் உண்டு. தரமான புளொக்குகளைத் தயாரிப்பின் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொள்ளலாம். சீமெந்து, மண், நீர் ஆகியவற்றைக் கொண்டு இவை தயாரிக்கப்படுகின்றன. சில இடங்களில் இவற்றுடன் சிறுகற்களையும் ( சல்லி அல்லது கிறஷர்) சேர்த்து



புளொக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

அரசாங்கக் கட்டட வேலைகளுக்கும், தனியார் கட்டட வேலைகளுக்கும் சீமெந்து புளொக்குகள் பயன்படுத்தப்படுவதால், சந்தை வாய்ப்பு நிறைய உண்டு. கட்டட ஒப்பந்தக்காரர்களுடன் தொடர்பு வைப்பதன் மூலம் விற்பனையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஆரம்பப் பயிற்சியுடனேயே இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம்.
இதற்குத் தேவையான மூலப்பொருட்கள் –
சீமெந்து – 10 பைகள் (நாளொன்றுக்கான உற்பத்திக்கு)
மண் – 1/2 கியூப்.
தண்ணீர்.
தேவையான உபகரணங்கள் –
இயந்திரப்பொறி (மின்சாரத்தால் இயக்குவது),
அச்சு (4"6" 8" அளவு கொண்டவை)
பாத்திரங்கள் – மண்வெட்டி, சவள் போன்றவை ஆகும்.

தொழிலாளர்களை மேலும் சேர்த்துத் தொழிற்படும் போது, உற்பத்தி அதிகரிக்கும். உற்பத்திச் செலவு குறையும். இயந்திரப் பொறியைப் பயன்படுத்தாது கையாலும் சீமெந்து புளொக்குகளைத் தயாரித்துச் சந்தைப்படுத்தலாம்.

# சமாதான சூழல் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது கேள்விக்குரியது

## தமிழீழ விடுதலை புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்



(கிளிநொச்சி)

மீண்டும் போர் வருமா என்ற அச்ச உணர்வுடன் மக்கள் உள்ளனர் என, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி - அம்பாள்குளம் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை குமா சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மைக் காலமாக இலங்கை அரசால் திட்டமிட்டு தென் தமிழீழத்தில் மேற் கொள்ளப்பட்டு வரும் அரசியல் படுகொலைகளால் மக்கள் மீண்டும் போர்வருமா என்ற அச்ச உணர்வுடன் உள்ளனர்.

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்தமான ஒரு பேரழிவை விட, வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சுனாமி கடற் கொந்தளிப்பானது ஒரு பாரிய விளைவை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த் தாக்கத்தின் பாதிப்புக்குள்ளான பெரும் பகுதியாக வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசம் திகழ்கிறது.

ஒட்டு மொத்தமாக இலங்கைக்கு வழங்கப்படுகிற உதவிகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட முறையில் தென்னிலங்கை சிங்களப் பிரதேசங்களில் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசம் இன்று புறக்கணிக்கப்படுகின்றன. இது திட்டமிடப்பட்டு சிங்களப் பேரினவாத சக்திகளால் நிகழ்த்தப்படும் நடவடிக்கையாகும்.

இந்த நடவடிக்கை சர்வதேச உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளன.

சிங்களப் பேரினவாதத்தின் உண்மையான முகத்திரையை தேசியத் தலைவர் உலகிற்கு முழுமையாகப் பறை சாற்றியிருக்கிறார்.

சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை உலகம் உணர்ந்திருக்கிறது. அந்த வகையில் சமாதானச் சூழல் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது ஒரு கேள்விக்குறியான நடவடிக்கையாக இந்த அமைதிப் பாதை திகழ்கிறது.

எனவே இந்தக் காலத்தை எங்களுக்கான, எமது தேசத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்வோம். இந்த வகையில் சிறுவர்களின் எதிர்கால நலன்களைப் பலப்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டதே இந்தப் பசுமையான சிறுவர் பூங்கா.

இந்தப் பூங்காவின் அமர்ந் திருக்கும் மழலைகளின் எதிர்காலத்தின் சிந்தனைக்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து உழைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 24

1766 : இந்தியாவில் அஞ்சல் முறை ஆரம்பிக்கப்பட்டது.

1794 : போலந்து தேசத்தை துண்டு போட்டு ஆதிக்கம் செலுத்த பிரஷ்யாவும், ரஷ்யாவும் முற்பட்ட போது தனது நாட்டு மக்களை ஒன்று திரட்டிய போலந்து வீரர் கோஷியாங்கோ விடுதலை அல்லது வீரமரணம் என முழக்கமிட்டு கிராக்கோ நகர சந்தைச் சதுக்கத்தில் சுதந்திரத் தீபத்தை ஏற்றினார்.

1882 : ஜேர்மனியின் மருத்துவ அறிவியலாளரான ரோபேர்ட் கோச் என்பவர் காச நோயை உண்டாக்கும் மைக்கோ பக்டீறியம் என்னும் கிருமியைக் கண்டு பிடித்ததாக அறிவித்தார்.

1924 : கிறீஸ் குடியரசு நாடாகியது.

1933 : பொலித்தீன் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது.

1934 : 1945 ஆம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸ் சுதந்திர நாடாக செயற்படும் என்ற அறிவிப்பை அமெரிக்கா விடுத்தது.

1965 : இலங்கையில் டட்லி - செல்வா உடன்படிக்கை ஏற்பட்டது.

1976 : ஆர்ஜென்டீனாவில் இராணுவப்புரட்சி ஏற்பட்டு ஜனாதிபதி இஸபெல் மார்டினெஸ் டீ பெரான் இராணுவத்தால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

1982 : ஜெனரல் ஏச்.எம்.எர்ஷாத் இராணுவப் புரட்சி மூலம் பங்களாதேஷ ஆட்சியைக் கைப்பற்றினார்.

1987 : ஏ.எஸ்.எல்.வி. என அழைக்கப்பட்ட திறன் சேர் செயற்கைக் கோள் ஏவுகலம் இந்தியாவின் முதலாவது முயற்சியாக விண்ணில் செலுத்தப்பட்டது. வெற்றியளிக்கவில்லை.

1990 : இந்திய இராணுவம் தமிழர்தாயகப் பகுதிகளில் இருந்து முழுமையாக வெளியேறியது.

தொகுப்பு - சந்துரு

# வன்னிப் பிரதேசத்தில் கால்நடைகளின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் கால்நடைகளின் அபிவிருத்தி நலிவுற்றுப் போனதால், அதனை மேம்படுத்த மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல், கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வு வட்டக்கச்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், கால்நடை வைத்தியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் வன்னி மாவட்ட கால்நடை அபிவிருத்திக்கென ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் வடபகுதி கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த திட்டப் பணிப்பாளர்கள், பொருண்மிய பிரதிநிதி ஆகியோர் அடங்குவர். (த)

# வளப்பற்றாக்குறை விளையாட்டுத்துறையை வளர்த்தெடுப்பதற்குத் தடையாக உள்ளது!

## கிளிநொச்சி புனிததிரேசா மகளிர் கல்லூரி அதிபர்

வளப்பற்றாக்குறைகள் விளையாட்டுத்துறைககளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளன என கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் பரிச ளிப்பு நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலப் போரின்போது எமது கல்லூரி முற்றாக அழிக்கப்பட்டது. நாம் மீண்டும் எமது சொந்த இடத்துக்கு மீள் குடியமர்ந்தபோது, எமது கல்லூரியைச் சூழ மண் அரண்கள் இருந்தன. தற்போதுகூட எமது அயல்பகுதிகளில் மண் அரண்கள் அகற்றப்படாமல் உள்ளன. எமது கல்லூரியில் ஒழுங்காக மைதானம் இல்லை. மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியை மேற்கொள்ள உடற்பயிற்சி ஆசிரியர் இல்லை. இந்த நிலை நாம் தற்போதைய சூழலைக் கருத்திற் கொண்டு ஆடம்பரம் இல்லாமல் மிக எளிமையாக விளையாட்டுப் போட்டியை நடத்தினோம் என அவர் மேலும் தெரிவித்தார்..

இதேவேளை 1996 சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை ஆக்கிரமித்த இராணுவத்தினர் இந்தக் கல்லூரியை முற்றாக அழித்தனர். தற்போது இந்தக் கல்லூரியில் ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு மற்றும் பௌதீக வள நெருக்கடி மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளுக்கு இடர்களாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போரியல் வரலாற்று ஆவண காட்சிப்படக் கூடம் திறப்பு!

(கிளிநொச்சி)

போரியல் வரலாறு ஆவணக் காட்சிப் படக் கூட திறப்பு நிகழ்வு - பளை இத்தாவில் சந்தியில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வரலாற்றையும், இருப் பையும், அடையாளத்தையும் பாதுகாப்பதோடு இந்த வரலாற்று எச்சங்களையும் பாதுகாத்தல் என்பது, ஒவ் வொரு தமிழரின் வரலாற்று கடமை யும், கடப்பாடும் ஆகும் என, இந்த நிகழ்வையொட்டி தமிழீழ அரும் பொருள் காப்பு நடுவப் பணியகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையின் அரும் பொருள் காப்பக நடுவகம் ஒழுங்கு செய்துள்ளது.

# அடிப்படை வசதியற்ற நிலையில் விநாயகபுரம் பிரதேச மக்கள்

முல்லைத்தீவு - விநாயகபுரம் பகுதி மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள விநாயகபுரம், ஒட்டன்குளம், கொம்பறுத்தகுளம், பூவரன்குளம், பொன்னகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தற்காலக் குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதி மக்களுக்கான போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி என்பன இதுவரையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதாயின், பல மைல்களுக்கப்பால் சென்று தமது தேவைகளைப் பெரும் சிரமத்தின் மத்தியில் பூர்த்திசெய்து வருகின்றனர்.



மாவீரர் லெப்டினன்ட் குமா நினைவு சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றுவதையும், தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றுவதையும், நிறுவனங்களுக்கான கொடிஏற்றப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோர் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### அதிகார வர்க்கத்தின் நிஜ முகங்கள்

கிழக்கு மாகாணம் வெலிக்கந்த பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ளன. தீவுச்சேனையில் இயங்கி வந்த கருணா கும்பலின் முகாம் தொடர்பான கொழும்பு ஆங்கில வார இதழ் சண்டே லீடரில் வெளிவந்த செய்தியும், பின்னர் அதனைத் தொடர்ந்து அந்த முகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையும் ஜனாதிபதியின் மீதும் அரசின் மீதுமான சகல நம்பிக்கைகளையும் முற்றாகச் சிதைத்து விட்டது என்றால் அது மிகையில்லை.

சமாதான முன்னெடுப்புக்களில் அரசின் நேர்மையென்பது இந்தச் சம்பவத்தை அடுத்து முற்றாகக் கேள்விக் குறியாக்கி விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஜனாதிபதி இன்னமும் போரைத் தொடரும் உள்நோக்கத்துடனேயே சமாதான முயற்சிகளில் ஆர்வமுள்ளவர் போன்று பாசாங்கு செய்து வருகிறார் என்பது இப்போது இன்னமும் உறுதியாகிவிட்டுள்ளது.

ஒருபுறம் சமாதான முயற்சிகளை முற்றாகவே நிராகரிக்கும் ஜே.வி.பியினரை அரசின் சமபங்காளிகளாக ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதியால் அவர்களின் மேலாதிக்கப் போக்கையும், அத்துமீறல்களையும், தன்னையே கிண்டல் செய்து விமர்சிக்கும் செயற்பாடுகளையும் கண்டித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவோ அல்லது அவர்களின் வாயையாவது அடக்கி வைக்கவோ திராணியற்ற நிலையில் அவர்களை மீறி சமாதான முயற்சிகளில் இம்மியளவு முன்னேற்றத்தை மேற்கொள்வது சாத்தியம் இல்லை.

அடுத்து ஹெல உறுமய, தேசப்பற்றாளர் அமைப்பு போன்ற தீவிர பேரினவாத சக்திகள் சமாதான முயற்சிகளுக்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளை இப்போது முன்னைவிடவும் தீவிரமாக எதிர்க்கத் தொடங்கியிருப்பதால், இனிமேலும் இது தொடர்பாக அரசால் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது என்பதும் உறுதி.

ஜே.வி.பியுடன் முரண்பட்டது அபாயம்.

ஹெல உறுமய போன்ற இனவெறியர்களுடன் முரண்பட்டால் ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலத்துக்கு ஆபத்து.

இதேவேளை - அரசுடன் ஒட்டியும். ஒண்டியும் இயங்கும் ஆயுதக்குழுக்கள் விடுதலைப் புலிகளுடன் அரசு எந்த வகையான தொடர்புகளையும் வைத்திருப்பதை விரும்பவில்லை.

அவர்களைப் பேணிப் பராமரித்து ஆயுதங்களை வழங்கி, முகாமமைத்துக் கொடுத்துப் பாதுகாக்கும் அரசும் படைத்தரப்பும் அவர்களது விருப்பத்துக்கு மாறாக நடக்குமென எவரும் நம்பவும் முடியாது.

அவர்களை வைத்துக் கொண்டே தமிழர் தரப்பை பலவீனப்படுத்தி, தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் மூலோபாயங்களை வகுத்து செயற்படுத்தும் ஜனாதிபதியும் அரசும், படைத்தரப்பும் அவர்களை திருப்திப்படுத்த முனைவதில் வியப்பில்லை. அது அவர்களுக்குத் தவிர்க்க முடியாத அவசியமுமாகும்.

உண்மையில் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைபெற்று சுபீட்சம் நிலவவேண்டும் என அரசோ, ஜனாதிபதியோ உறுதி கொண்டிருந்தால், சமாதான விரோத, தேசவிரோதக் கும்பல்களை போஷித்து பாதுகாத்துஅரவணைக்க வேண்டிய அவசியமேயில்லை. அவர்களை ஆயுதபாணிகளாக்கி இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கவைத்து தமிழர் பகுதிகளில் இயல்பு நிலை பாதிப்படையச் செய்திருக்க வேண்டிய தேவையுமில்லை.

எனவே இத்தனையையும் எந்த உள்நோக்கத்துடன் இந்த அரசு மேற்கொண்டு வருகின்றதென்ற கேள்விக்கு ஒரே விடையாகத் தென்படுவது - அரசு தொடர்ந்தும் சமாதானத்துக்கான யுத்தம் என்ற ஜனாதிபதியின் கோட்டில் செயற்படும் இலக்குடன் மட்டுமே செயற்பட விரும்புகிறது என்பதேயாகும்.

கிழக்கு மாகாணத்தின் அமைதி குலைப்பு மையமாகச் செயற்படும் வெலிக்கந்த பகுதியில் தீவுச்சேனை முகாம் தாக்குதலின் பின்னர் அப்பகுதிக்கு ஊடகவியலாளர்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் படைத்தரப்பு தீவிரம் காட்டுவதாக செய்தி வெளியாகியுள்ளது. இது தமிழ் ஆயுதக் குழுக்களை வைத்துக்கொண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளும் மறைமுக உளவியல் யுத்த நடவடிக்கைகள் வெளிச்சத்துக்கு வெளிவந்துவிட்டதன் எதிரொலியேயாகும்.

இதேவேளை இத்தகைய ஆயுதக்குழுக்கள் தொடர்பான செய்திகளைக் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்குக் கசியவிட்ட படையதிகாரிகள்மீது ஜனாதிபதி கடும் சீற்றம் கொண்டுள்ளதாகவும், இதன்மூலம் இதுநாள்வரை உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்தில் இத்தகைய குழுக்கள் எதனுடனும் தனக்கோ அரசுக்கோ தொடர்புகள் இல்லையெனக் கூறிய பொய்கள் தெரியவந்துவிட்டதாகக் குமுறுவதாகவும் தெரிய வந்துள்ளது.

உண்மை சுட ஆரம்பித்துவிட்டது போலும்

இத்தகைய இரட்டை வேடம் போடும், இரட்டை வார்த்தைகள் பேசும், இரட்டை நோக்குக்கொண்ட, மனோதர்மம் அறவே இல்லாத அதிகார வெறிகொண்ட ஒரு ஜனாதிபதியுடன், ஜனநாயகம், மனித உரிமை, சமாதானம் ஆகியவை குறித்து நம்பகமான முறையில் எவரால்தான் பேசமுடியும்.?

இவரை நினைக்கும்போது - இவரது செயல்களை நோக்கும்போதும் அமைதிப் பேச்சுக்களினூடாக ஒரு அரசியல் தீர்வை எட்டமுனையும் முயற்சி அர்த்தமற்ற ஒன்றாகவே அமையும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சிலரைப் பலகாலமும் பலரைச் சிலகாலமும் தான் ஏமாற்ற முடியும்.

ஆனால் காலம் எல்லோரையும், எல்லாவற்றையும் காலாகாலத்தில் அம்பலப்படுத்தாவிட்டாலும் காலப்போக்கில் உண்மைகளை வெளிப்படுத்தியே தீரும்.

அதியுத்தம ஜனாதிபதி அவர்களே இதனை நீங்கள் புரிந்துகொண்டு வரலாற்றில் இரத்தம் சிந்தும் மற்றொரு கால கட்டத்தை உருவாக்காதிருப்பீர்களாக...!

## நாடும் நடப்பும்



சமாதானம் தப்பிப் பிழைக்குமா?

# தொல்லைக்குப் பயந்துபோன அகதிகள் தொல்லையில்லாமல் திரும்ப முடியாதா?

போர் விமானங்களின் குண்டுவீச்சு, ஹெலிகளின் பீரங்கிச் சூடு, தரையில் படையினரின் அட்டகாசம் இந்தத் தொல்லைகளிலிருந்து குழந்தைகளையும், வளர்ந்த பிள்ளைகளையும் காப்பாற்றவேண்டும். அயலிலுள்ள தமிழ்நாட்டுக்குப் போவதைத் தவிர வசதி குறைந்த மக்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. வசதி படைத்தவர்கள் விமானத்தில் வெளிநாடுகளுக்கும், அயல் நாட்டுக்கும்கூடப் போய்ச் சேர்ந்தார்கள். வசதி குறைந்த மக்களும் ஆளுக்கு மூவாயிரம், நாலாயிரம் என்று கொடுத்துத்தான் வள்ளங்களிலும், படகுகளிலும் அயல் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இந்தப் பயணத்தில்கூட, இலங்கை விமானப்படை விமானங்கள் - அகதிப் படகுகள் மீதும் குண்டுவீசின. கடற்படையும் அகதிப்படகுகள் மீது தாக்குதல்கள் நடத்தின. இவற்றிலும் சிலர் மாண்டனர். மாண்டவர்கள் போக மற்றும் பலர் உயிரைக் கையில் பிடித்து, தமிழ் நாட்டுக்கு மீண்டனர். இன்று நாட்டில் போர் நிறுத்தம் மூன்று வருடங்களாக நடைமுறையிலிருந்தாலும், எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சம் இல்லாமலில்லை. ஆனாலும் தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் இருந்து பட்ட துயரம் போதும், படமுடியாது இனித் துயரம் என்று கொஞ்சம் கொஞ்சமாக அகதிகளாகச் சென்றவர்கள் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்கள் படும்பாடு இப்போ பெருங் கதையாக இருக்கிறது என்று மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டிருந்தார் பரமசிவம்.

நீர்சொல்வது சரிதான். தமிழ்நாட்டிலிருந்து படகுகளில் திரும்பி வரும் அகதிகள் - கடலில் மணல் திட்டுக்களில் இறக்கிவிடப்படுவதும், அதில் அவர்கள் படும் அவஸ்தையும் பின்னர் அவர்கள் கடற்படையால் கைது செய்யப்படுவது அல்லது நமது மீனவர்களால் காப்பாற்றப்படுவது எல்லாம் சோகச் சம்பவங்கள் தான் என்றேன்.

இதுமட்டுமல்ல, சிலவாரங்களுக்கு முன்னர் இப்படி ஒரு திட்டில் இறக்கிவிடப்பட்டவர்களை ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று கொள்ளையடித்ததுடன், பெண்களையும் மானபங்கம் செய்ததாகவும் செய்திகள் வந்தன என்றார் பரமசிவம்.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல இது நடந்தது இந்த ஆயுததாரிகள் இலங்கையின் கடற்பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் என்றும் சொல்லப்பட்டது. இது மட்டுமல்ல, நீதிமன்றத்திலும் இது சம்பந்தமாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டப்பட்டது. ஆனாலும் அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களின் மிரட்டலுக்குப் பயந்து, அடையாள அணிவகுப்புக்கு பாதிக்கப்பட்டவர்கள் போகவில்லை. அவர்களுக்குத்தான் தெரியும் காட்டுமிராண்டிகளின் கொடூரம் என்றேன். இரு தினங்களுக்கு முன்னர் இரண்டு பிள்ளைகளுடன் ஒரு தாய் ஒரு திட்டியில் நின்றதாகவும், பின்னர் காணவில்லையென்றும் ஒரு செய்தி. அது சரி! நாட்டுக்குத் திரும்ப விரும்புபவர்கள் அங்கு அகதிமுகாமுக்குப் பொறுப்பானவர்களிடம் சொல்லி, உரிய அதிகாரிகள் மூலம் நாடு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யலாம் தானே என்றேன்.

நீர் இதைச் சொன்னது போல அங்கே இதைச் சுலபமாகச் செய்ய முடியாது. இங்கிருந்து அகதிகளாகச் சென்றவர்களில் சிலர் உறவினர்கள், நண்பர்களோடு தங்கியிருப்பதாகச் சென்று, பணம் செலவிட்டு தனியாக வீடு வாடகைக்கு அமர்த்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வெளிநாடுகளில் பிள்ளைகளோ, சகோதரர்களோ, உதவி செய்யும் உறவினர்களோ இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து வரும் பணத்தை இவர்கள் செலவு செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களால் அங்கு காய்கறிகளும், இறைச்சி, மீன் வகைகளும் அதிக விலைக்குப் போயிருப்பதாக உள்ளூர் வாசிகள் இவர்கள் மீது புகார் செய்வதுமுண்டு. இதே சமயம் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களால் தமிழ் நாடு அரசுக்கோ, இந்திய அரசுக்கோ பணச் செலவில்லை இவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாமல், கியூ பிரிவுப் பொலிஸ் பார்த்துக் கொள்ளுவார்கள். அங்குள்ள அரசியல் கட்சிகளுடன் இவர்கள் தொடர்பு வைத்து கொள்ளுகிறார்களா என்பதையும் இந்தப் பொலிஸார் கவனமாகப் பார்த்துக்கொள்கிறார்கள். அதேசமயம் இடையிடையே "கியூ" பிரிவிலிருந்து உங்களைப் பார்க்க வருகிறோம். என்று வந்து ஒழுங்காக இருக்கிறார்களா என்று வந்து போவதுண்டு. இதில் கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் இவ்விதம் விசாரிப்பது தங்களுடைய "சந்தோஷத்துக்காக" என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். இப்படித் தனியாகத் தங்கியிருப்பவர்களுக்குச் சில மாவட்டங்களில் ரேஷன் கார்ட் என்ற உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. மற்றும் பல இடங்களில் வழங்கப்படவில்லை. பங்கீட்டு அட்டைகளுக்கு இரண்டு மூன்று ரக அரிசிகள், சீனி, மண்ணெண்ணை முதலியன வழங்கப்படும்.

இங்கிருந்து எந்தத் தொடர்பும், உறவுமல்லாமல் போனவர்கள் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள. சில இடங்களில் உள்ள முகாம்கள் ஓரளவு வசதிகளுடன் அந்த முகாம்களுக்குப் பொறுப்பாக நல்லவர்களும் செயற்படுகின்றார்கள். இதனால் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களும் கிடைக்கின்றன. வெளியிடங்களுக்குச்சென்று கூலிவேலை செய்வதற்கு இவர்களுக்கு வாய்ப்பும் கிடைக்கும்.

தனியாக வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கியிருப்பவர்களிடம் இடையிடையே அதிகாரிகள் வந்து நீங்க ஊருக்குப் போக விரும்புகிறீர்களா? என்று கேட்டுப் பதிவார்கள் விருப்பமில்லையென்றால் விரும்பும் போது செய்யுங்கள் என்று சொல்லிவிட்டுப் போவார்கள்.

ஊருக்குத் திரும்ப விரும்புபவர்கள் கலெக்டர் அலுவலகத்துக்குப் போகவேண்டும். பின்னர் விமானப் பயணத்துக்கு ஆசனம் பதிவு செய்யவேண்டும். இதற்கிடையில் அவர்கள் தங்கியிருந்த பகுதி வருமானப் பிரிவு அதிகாரியிடம் போவதற்கான அனுமதியும் அந்தந்தப் பகுதியில் பொலிஸ் நிலையத்தில் சென்று எந்தக் குற்றச்சாட்டும் இல்லையென்று சான்றிதழ் பெறவேண்டும். இவற்றுக்கெல்லாம் நிறைய புகைப்படப் பிரதிகளை வசம் வைத்திருக்கவேண்டும். இவையெல்லாம் முடிந்த பின் கலெக்டர் அலுவலகத்திலிருந்து போகலாம் என்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். இதைப் பெறுவதற்கு முன் - அங்குள்ள சிற்றூழியரிலிருந்து லிகிதர் மற்றும் உத்தியோகத்தர் வரை எப்படிக் காலத்தை கடத்தமுடியுமோ அப்படி காலத்தைக் கடத்தி, செலவுவைக்க முடியுமோ செலவுவைத்து, கடைசியில் வாயாலேயே பணம் கேட்டுப் பிடுங்கிவிடுவார்கள்.

எத்தனை தமிழ்ப் படங்களில் லஞ்சம் ஊழல் பற்றியும், காவல்துறை பற்றியும் எப்படிக் கேவலப்படுத்தினாலும் அது திருத்தமுடியாத பிரச்சினை. அகதிகள்தானே தங்கள் நாட்டுக்குப் போகப்போறாங்க போய்த் தொலையட்டும் என்று விடமாட்டாங்க. எங்கே பார்த்தாலும் எந்த இடத்திலும் லஞ்சம்! ஊழல்கள் என்றார் பரமசிவம்.

இதனால்தானோ என்ன கஷ்டமென்றாலும் படகுகளில் அகதிகள் திரும்புகிறார்களாக்கும் என்றேன்.

படகுகளில் வருபவர்கள் இக்கரையில் வந்தால் இங்கு கடற்படை பிடித்து சிறைவைத்து விடுகிறது. இந்திய - இலங்கை அதிகாரிகள் சந்தித்துப் பேசி அகதிகள் அங்கேயும் தொல்லைப்படாமல், இங்கேயும் கஷ்டப்படாமல் தங்கள் இடங்களுக்குப் போய்ச் சேர வழிகாணவேண்டும் என்று சொன்னபடியே சென்றார் பரமசிவம்.

பகுதி ௬௧

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இந்தநிலையில் தான் இந்திய அரசினால் அனுப்பி வைக்கப்பட்ட ஜெனரேட்டர்களின் விநியோகத்தில் நடந்த மோசடி பற்றிய செய்தி இந்திய, இலங்கை அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்ட பின்னர் தான் இந்த ஜெனரேட்டர்களை காணவில்லை என்ற முறைப்பாடு பொலிஸில் கொடுக்கப்பட்டது. இது கூட ஒரு மோசடியை மூடி மறைக்கும் செயலே.

ஒட்டுமொத்தமாக திருமலை அரச அதிபர் இந்தச் சுனாமி அனர்த்தத்தின்போது,திட்டமிட்ட முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடையாது, பாதிக்கப்படாத சிங்களவர்களுக்கும், சிங்களப் பிரதேசிங்களுக்கும் அனுப்பி வைத்ததாக நாங்கள் குற்றம் சாட்டுகிறோம் எனப் பதிலளித்தார்.

'தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவுகள் எப்படியிருக்கின்றன?' எனக் கேட்டேன். அதற்கு 'நாங்கள் ஏற்கெனவே மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென 3 லொறி சாமான்களை வைத்திருந்தோம். இவை சுமார்15 லட்சம்ரூபா பெறுமதியானவை. 27ஆம் திகதி காலை திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகிய இருவரும் சம்பூரிலிருந்து எம்முடன் தொடர்பு கொண்டனர். எம்மிடமுள்ள அந்தப் பொருட்களை வேறு எங்கும் வழங்காது மாவட்டத்தில் மிகப்பாதிப்புற்ற பகுதியான கிண்ணியா பிரதேசத்துக்கு உடனடியாக வழங்குங்கள் என வேண்டிக் கொண்டனர். நாமும் மிகச் சிரமத்தின் மத்தியில் அவற்றை தம்பலகாமம் வழியாகக் கொண்டு சென்று கிண்ணியாவின் சூரன்கல், நடுவூர், காக்காமுனை போன்ற பகுதிகளுக்குச் சென்று பள்ளிவாசல்களிடம் ஒப்படைத்தோம்.



மேலும், மூதூரில் முதன் முதலாகச் சென்றது தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பொருட்கள் தான். அவர்கள் இரண்டு லொறி பொருட்களையும் இரண்டு லட்சம் ரூபா பணத்தையும் அங்குள்ள பள்ளிவாசலுக்கு வழங்கினர். அதன் பின்னர் நாமும் முஸ்லிம் மக்களுக்குரிய முறையில் நிவாரணம் கிடைக்காதவிடத்து, எம்மிடம் கிடைத்தவற்றைக் கொடுத்தோம். இதேமாதிரி வறக்காப்பொல, பொல்காவல பகுதிகளிலிருந்து வந்த முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுக்கு கூடுதலான நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

இதன்பின்னர் இரு பகுதியினரும் இணைந்து வாழ்ந்தால் தான், எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை உணர்ந்துள்ளனர்' எனக் குறிப்பிட்டார்.

'காணி விநியோகம் தொடர்பான ஜே.வி.பியின் எதிர்ப்பு பற்றிக் கூறுங்கள்' என வேண்டினேன். . 'திருமலையில் தாராளமாக நிலம் உள்ளது என்ற அடிப்படையில்,' பாதிப்புற்றோருக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்குமாறு சம்பந்தர் எம்பி கோரிக்கை விடுத்தார். இதற்கு ஜே.வி.பி எம்பி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். இங்கு பாதிக்கப்பட்டோர் தமிழ்பேசும் மக்களே. ஆகையால் இவ்வாறு நிலம் பிரித்துக் கொடுக்கும்நிலை ஏற்பட்டால், தங்களது திட்டமிட்ட குடியேற்ற முயற்சிக்கு எதிர்காலத்தில் தடை ஏற்படும் எனக் கருதியே ஜே.வி.பி எம்பி எதிர்த்தார். இதனால் 30 பேர்ச் என்று வந்துபின்னர் 12 பேர்ச் என்ற வகையில் தீர்மானமாகியுள்ளது.

'இவ்வாறான குடியேற்ற முயற்சி நடைபெறவுள்ளது என்பது குறித்து, ஏற்கனவே தங்களுக்குத் தெரிந்திருந்ததா?' எனக் கேட்டேன். அதற்கு அவர் -'இல்லை, ஏதோ ஒன்று செய்யப் போகிறார்கள் என்பதை அவர்களது நடவடிக்கை மூலம் விளங்கியதே தவிர, இப்படிச் செய்வார்கள் என எண்ணவில்லை. 200 மீற்றர் பிரகடனம் குறித்த சிங்களப் பிரதேசங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தமை குறித்து, நாங்கள் கண்டனம் தெரிவித்திருந்தோம்.

மேலும் இவர்களைக் குறித்த இடத்தில் குடியேற்றுவது குறித்து, கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஜே.வி.பி எம்பி பிரஸ்தாபித்த போது, அங்கிருந்த சகலரும் எதிர்த்தனர். அதனால் அது கை விடப்பட்டதாக ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. எனினும் அரசு மறைமுகமாக இந்தச் சட்டவிரோத குடியேற்றத்துக்கு ஜே.வி.பிக்குத் துணை புரிந்துள்ளது. எம்மைப் பொறுத்தவரை நாம் இது தொடர்பாக எதுவும் திட்டமிடவில்லை. எனினும் உளரீதியாக நாம் அனைவரும் இந்த மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு நிரம்பியவர்களாக இருந்ததால் மிகக் குறுகிய நேரத்தில் எதிர்ப்பு நடவடிக்கையை ஒன்றிணைந்து மேற்கொண்டோம்' எனப் பதிலளித்தார்.

இந்த நடவடிக்கையின் போது படைத் தரப்பின் அச்சுறுத்தல் உங்களுக்கு ஏற்படவில்லையா?' எனக்கேடடேன்.

இன்றும் கூட, படைத்தரப்பிலிருந்து மறைமுகமான எச்சரிக்கை விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. புலனாய்வுப்பிரிவினர் எம்மை நோட்டம் விட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை (தாக்குதலோ , அழிப்பதோ) மூலம் எதிர்காலத்தில் இநத் நடவடிக்கைகளைத் தடுக்க முடியும் என அவர்கள் கருதுவதாகவும் அறிகிறோம். இருப்பினும் , நாம் இவ்வாறான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயங்கினால், நாம் திருமலையைப் பறிகொடுக்க நேரிடும். எனவே என்ன விலை கொடுத்தும் இந்த மண்ணைக் காப்பாற்ற வேண்டும்' என தீர்மான மாகக் கூறினார்.

நகர மணிக்கூட்டுக்கோபுரத்தில் சிங்கக் கொடியைக் கட்டியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையில் சிங்களவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நடராஜன் பிறந்த மண்ணில், பாடசாலையில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பொசுபரஸைப் பயன்படுத்தி இலங்கையின் தேசியக் கொடியை எரித்து, அதன் விளைவுகளைச் சந்திக்க தயாரான சீலன் பிறந்த மண்ணில் மீண்டும் நம்பிக்கையுடன் உறுதியாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் விடுதலை பற்றிய நம்பிக்கையை மேலும் வெளிச்சமாக்கின.

( தொடரும்... )

கல்வியியல்

சோ.சி.சிவானந்தராஜா

# சுனாமி தாக்கத்தால் கற்றல் செயற்பாடுகளில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகள்...!

சுனாமி கடல் அனர்த்த தாக்கத்தால் பெரும் துயருள்மூழ்கி, மீண்டு கொண்டிருக்கும் எம் உறவுகளை கை கொடுத்து உயர்த்தும் தேசியப் பணியில் எமது தேசத்தின் எல்லா அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் அந்தப் பிரதேச மக்களின் எதிர்கால சந்ததியினரின் கல்வித் தேவையை இனங்கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய பணி செய்ய வேண்டியது கல்வித் துறை சார்ந்தவர்களின் கடமையாகும்.

அந்த வகையில் கடந்த 07 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு ஆழியவளை உடுத்துறைப் பகுதிகளை நோக்கி நாம் சென்றோம். அவர்களுடன் உரையாடியதுடன் சில மணிநேர கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிலும் ஈடுபட்டோம். அந்த மாணவர்களின் - கற்கும் ஆர்வம் எம்மை மகிழ்ச்சிப்படுத்தியதுடன், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆசிரிய வளம், பொருளாதார வளம் போன்றவற்றின் வெற்றிடத்தால் அவர்களது கற்றல் செயற்பாடு தாமதப்படுவதைக் கண்டு கவலையடைந்தோம்.

அந்தப் பிரதேத்தில் கல்வியை வளப்படுத்த உதவும் வகையில், எமது கல்விச் சமூகம் இந்தப் பிரதேசங்களை நோக்கி நகரும் என்ற நம்பிக்கையுடன் இந்தக் குறிப்பினை எழுதுகின்றேன்.

நாம் சென்ற பாடசாலையில் ஒன்று கடற்கரையில் இருந்து கிட்டத்தட்ட 800 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது என்று நினைக்கிறேன். அந்தப் பாடசாலை நேரடியாக பொருட்சேதங்களை எதிர் கொள்ளவில்லை. ஆனாலும் பல மாணவர்களையும், உறவுகளையும் இழந்துள்ளது. ஆனால் மற்றைய பாடசாலையோ நேரடியாக அலைத் தாக்கத்தை எதிர் கொண்ட பாடசாலையாகும். அண்மையில் புத்துருவாக்கம் செய்யப்பட்ட கட்டடங்கள் (கொட்டில்) அலைத் தாக்கத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சுற்றுச் சூழலும் அதிகமாகப் பாதிப்படைந்துள்ளது.

மீண்டெழும் மன வலிமையுடன் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் இணைந்து கொண்டிருந்தாலும், அவர்களது அடி மனதில் துயரம் படிந்து கிடக்கிறது. அதேவேளையில் அவர்கள் தமது கற்றலில் தம்மை இணைத்து, தாம் கல்வியைத் தொடர்ந்து உயர் நிலை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடசாலைக் கல்வியைத்தொடர, பிரதேச பாடசாலைகளை கிரமமாக இயங்க ஒத்துழைத்து வருகின்றனர்.

மிகப் பாரிய அலைத் தாக்கத்துக்கு உட்பட்ட மாணவர்கள் பாடசாலைச் சீருடை இல்லாத நிலையிலும், பாடசாலை வகுப்புக்களுக்கு சமுகமளித்து தமது கற்றலை மேற்கொள்வது பாராட்டத்தக்க விடயமாகும். அதிகப்படியான மாணவர்கள் இந்த நிலையிலேயே வகுப்புக்களுக்கு சமுகமளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அதே வேளை, முற்றாக சேதமடைந்த பாடசாலையில் மாணவர்கள் இருந்து கற்கக் கூடிய தளபாட உப கரணங்களோ, இடவசதிகளோ (கட்டடம்) இல்லாத நிலையில் மர நிழல்களின் கீழ், மணற்பரப்பில் இருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடத் துணிந்து கொண்டது மகிழ்ச்சியைத் தருவதாயினும் அவர்களின் நிலை கவலையைத் தருகின்றது.

பாடசாலைகளில் மாணவர்கள் எந்த நிலையிலும் 'கற்போம் உயர்வோம்' என்ற மனத்திடத்துடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் வேளையில், அவர்கள் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினை ஆசிரியர் பற்றாக்குறைதான். கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் பற்றாக்குறை காணப்படுகிறது. விருப்பத்துக்குரிய பாடங்களான வரலாறு போன்ற பாடங்களுக்கும், ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ளது. மற்றும் நடனம் போன்ற அழகியல் பாடங்களுக்கும் இந்த நிலையேயுள்ளது.

கரையோரப் பிரதேசமான இந்தப் பாடசாலைகளில் முக்கியமாக இருக்க வேண்டிய கடல்வளம் என்ற பாடத்துக்கு ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுகிறது. இந்தப் பிரதேச மக்கள் கட்டாயமாகக் கற்க வேண்டிய பாடமான இந்தப் பாடத்துறைக்கு ஆசிரியர் இல்லாமை கவலைக்குரிய விடயமாக உள்ளது. இந்தப் பிரதேச மாணவர்கள் இது பற்றி தமது கவலையை எம்மிடம் கூறினர். உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்தப் பிரதேச மாணவர்களின் பொருளாதார வளத்தை தீர்மானிக்கும் கடல்வளக் கல்வி இவர்களுக்கு கிடையாது போகின்ற நிலை ஏற்படக்கூடாது. எனவே துறை சார்ந்தவர்கள் இதனைக் கருத்திலெடுப்பார்கள் என நினைக்கிறோம்.

இந்த மாணவர்களுடைய கற்றல் ஆர்வம் மிகப் பாராட்டத்தக்க அளவில் இருந்தாலும் அந்த மாணவர்களை மிகமிக மகிழ்ச்சிகரமான கற்றல் மற்றும் வாழ்க்கை சூழ் நிலையில் வைத்து அவர்களுக்கான கற்பித்தலை வழங்க வேண்டியுள்ளது. சிறுவர்களை அவதானிக்கும் போது அவர்களிடம் அமைதியாக இருத்தல், சோர்வாக இருத்தல், ஏகாந்தமாய் இருத்தல் போன்ற பண்புகளை அவதானிக்க முடிகிறது. இதனை மாற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தங்கள் கற்றல் செயற்பாட்டை மாற்றி அமைக்க வேண்டும். அதன் ஊடாக புதிய உற்சாகத்துடன் மாணவர்களைத் துலங்கச் செய்தல் வேண்டும்.

பாடசாலை பொருளாதார கட்டட வளங்கள் உடனடியாகப் பூரணப்படுத்தப்படுவதன் மூலம் அவர்களின் கல்வி சிறப்பாக, சுமுகமாக இடம் பெற வழி செய்ய முடியும். முக்கியமாக இந்தப் பிரதேசத்தில் உதவும், பணிபுரியும் தொண்டர் நிறுவனங்கள் இந்தப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை அந்த மாணவர்கள் பெறுவதற்கு வகை செய்து கொடுத்தால், அது பெரும் உதவியாக அமையும். பாடசாலைச் சீருடையுடன் வகுப்பறைக் கல்வியில் ஈடுபடும் போது ஒன்றிப்பு ஏற்படும். அதனூடாக கற்றலில அந்த மாணவர்கள் இணைந்து கொண்டு துலங்குவர்.

எமது முதற் கட்ட பயணத்தில் இரு பாடசாலைகளில் சில மணி நேரம் பெற்ற தகவல்களையே இங்கு எழுதுகின்றோம். இன்னும் எழுத வேண்டியவை எத்தனையோ உண்டு.

# தவக்கால நற்சிந்தனை

'ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள்
காலடிகளைக்கழுவினேன் என்றால்,
நீங்ளுகம் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக்
கழுவ கடமைப் பட்டிருக்கிறீர்கள்.'' (யோவா.13:14)

புனித வாரத்தின் கடைசி மூன்றுநாட்கள். இன்று இரு முக்கிய அருட்டானங்களை ஆண்டவர் நிகழ்த்தினார். ஒன்று பணிக்குருத்துவம், மற்றையது நற்கருணை அருட்சாதனம். பணிக்குருத்துவத்தின் அடையாளமாக பன்னிரு சீடர்களின் பாதங்களைக் கழுவிப் பணிந்தார். இதன் பொருள் பணிவிடை பெற அல்ல, மாறாக பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாக தம் உயிரை வழங்கவந்ததென்பதை எண்பிக்கிறார். "தந்தை என்னை அன்பு செய்தது போல, நானும் உங்களை அன்பு செய்கிறேன். என் அன்பில் நிலைத்திருங்கள்'' என்றார். நற்கருணை அருட்சாதனத்தை ஏற்படுத்தியதன் மூலம் அன்று இஸ்ராயேல் மக்கள் இறைவன் என்றும் தங்களோடு இருக்கின்றார். இருக்கவேண்டும் என்பதற் காக, உடன்படிக்கைப் பேழையைத் தங்களோடு எடுத்துச்சென்றார். புதிய இஸ்ராயேல் மக்களாகிய நாம் அதே இறைபிரசன்னத்தில் என்றும் வாழ்கிறோம். அவர் நம்மோடு இருக்கின்றார் என் பதை நற்கருணை அருட்சாதனம் உறுதி செய் கின்றது. மக்களுடைய பாவங்களுக்காக உயிர்த் தியாகம் செய்தமையும் முன்னறிவிக்கின்றது. அன்று இஸ்ராயேல் மக்கள், பார்வோனின் அடி மைத்தனத்திலிருந்து விடுதலை பெற ஆட்டின் இரத்தத்தை கதவு நிலைகளில் பூசினார்கள்.



மோ. தார்சீசியஸ்

ஆனால் யேசு ஏற்படுத்திய நற்கருணையானது அல்கையின் பிடியிலிருந்தும், மரணத்தின் சாபப் பிடியிலிருந்தும் நம்மை விடுவிக்கின்றது. நமது ஆன்ம திருவுணவாகவும் பணிகளை நீக்கும் அருமருந்தாகவும் அமைகின்றது. இதன் புனிதத்தை உணர்ந்து வாழ்வோம்.

# பாகிஸ்தான் இராணுவ முகாம் பழங்குடியினர் முற்றுகையில்!



(பாகிஸ்தான்)

பாகிஸ்தானின் இராணுவ முகாமினை ஐயாயிரம் பழங்குடி மக்கள் அதிநவீன ஆயுதங்களுடன் சுற்றி வளைத்ததாகவும் இவர்கள் இராணுவம் மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

பாகிஸ்தான், பலூஸிஸ்தான் மாகாணத்தில் தேராபுக்தி என்ற இடம் உள்ளது. இங்கு முக்கிய இயற்கை எரிவாயு நிலையம் உள்ளது. இங்கு எடுக்கப்படும் எரிவாயுவுக்கு இந்தப் பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் தனியுரிமை கோரி வருகின்றனர்.

இந்த இடத்தில் மிகப்பெரிய இராணுவ முகாம் அமைக்க பாகிஸ்தான் அரசு திட்டமிட்டது. இதனால் பழங்குடியினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். மலைகள் நிறைந்த இந்தப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவ முகாம் ஒன்று ஏற்கனவே உள்ளது. கடந்த வாரம் பழங்குடியினருக்கும் இராணுவத்துக்கும் இடையில் நடந்த சண்டையில் 11 பழங்குடியினர் கொல்லப்பட்டனர்.

இதனால் பழங்குடியினர் கடும் கோபமடைந்து, இராணுவ முகாமைச் சுற்றி வளைத்தனர். அவர்களிடம் நவீன துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் காணப்பட்டதாக, இந்தப் பகுதியைச் சேர்ந்த இராணுவப் பிரிகேடியர் சலீம் நவாஸ் தெரிவித்தார்.

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அவர் பழங்குடியினர் முற்றுகையிட்டபோது எடுத்த வீடியோ காட்சியையும் பத்திரிகையாளர்களுக்குக் காண்பித்தார்.

முற்றுகையில் ஈடுபட்ட பழங்குடியினர் வீதித் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். பதுங்கு குழிகளும் தோண்டி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். இல்லையேல் மிகப்பெரிய பிரச்சினை ஏற்படும்.

பழங்குடியினர் மீது தாக்குதல் நடத்த இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதை நாங்கள் விரும்பவில்லை. கடைசி முயற்சியாகவே அதை மேற்கொள்வோம் என்று பிரிகேடியர் சலீம் நவாஸ் தெரிவித்தார்.



நேற்று நடைபெற்ற பாகிஸ்தானின் சுதந்திரதினத்தின் போது இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் ஜனாதிபதி முஷாரப் .

## புயலில் சிக்கிய கப்பலில் 200 பயிற்சியாளர் தப்பினர்!

அமெரிக்காவின் அலங்கா கடற் பகுதியில் மீன்பிடிப் பயிற்சிக் கப்பல் ஒன்று புயற்காற்றில் சிக்கி பாறை மீது வேகமாக மோதியது. ஆனாலும் கப்பலில் இருந்த 200 பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

அமெரிக்காவின் அலாங்கா கடற் பகுதியில் மீன்பிடி தொடர்பாக பயிற்சி வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த சமயம் புயற்காற்று வீசி கடலில் பாரிய கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக கடலில் இராட்சத அலைகள் 20 அடி உயரத்துக்கும் மேலாக எழுந்தன. இவ்வாறு எழுந்த இராட்சத அலையொன்றில் கப்பல் சிக்கியதில் அது கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் பாறை மீது மோதியதில் கப்பலில் பாரிய வெடிப்பு ஏற்பட்டது.

உலக நோக்கு

## பிரபல தெலுங்கு நடிகை ஆர்த்தி அகர்வால் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்!



பிரபல தெலுங்கு நடிகை ஆர்த்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு நேற்றுக்காலை உயிருக்கு ஆபத்தான நிலையில் ஹைதராபாத் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வீட்டில் மயங்கிக் கிடந்த அவரைக் குடும்பத்தினர் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

காதல் தோல்வி காரணமாக நகப்பூச்சு சாயம் நீக்கும் திரவத்தைக் குடித்துத் தற்கொலைக்கு முயற்சி செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இதனை மருத்துவமனை வட்டாரங்கள் உறுதி செய்யவில்லை. அவர் எதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற விபரத்தை வெளியிட அவரது குடும்பத்தினர் விரும்பவில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆர்த்தி அகர்வால் குஜராத்தில் பிறந்தவர். முதலில் இந்தித் திரைப் படத்தில் அறிமுகமானார். பின்னர் தெலுங்கில் வெங்கடேஸுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் படிப் படியாக சிரஞ்சீவி, நாகர்ஜுன் என அனைத்து முன்னணி நடிகர்களுடன் நடித்து தெலுங்கு கதாநாயகிகள் வரிசையில் முன்னணி இடத்தைப் பிடித்தார்.

இவர் எனக்கு 20 உனக்குப் 18, புன்னகை தேசம் உள்ளிட்ட பல தமிழ்ப் படங்களில் நடித்த கன்னட நடிகர் தருணைக் காதலித்ததாகவும், அதற்கு அவரது தாயார் எதிர்ப்புத் தெரிவித்ததால் தற்கொலைக்கு முயன்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## லெபனானில் குண்டுவெடிப்பு மூவர் உயிரிழப்பு; பலர் படுகாயம்!



(பெய்ரூட்)

லெபனானில் கிறிஸ்தவர்கள் வாழும் துறைமுக நகரான ஜோனிஸ் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

பெய்ரூட்டுக்கு வடக்கே கஸ்லிக் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத் தொகுதியிலேயே நேற்று அதிகாலை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

சிரிய எதிர்ப்பு கிறிஸ்தவக் கூட்டணியின் பலம் வாய்ந்த பகுதியில் கடந்த நான்கு நாட்களில் இடம்பெற்ற இரண்டாவது குண்டுத் தாக்குதல் இதுவாகும். லெபனானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி கடந்த மாதம் பெய்ரூட்டில் கார்க்குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு சிரியா மீது இந்த எதிர்க்கட்சிக் கூட்டணியினர் குற்றஞ்சுமத்தியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக சிரியாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் அங்கு இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் சிரியாவின் பின்னணியுடன் ஆளும் கட்சி குண்டுத் தாக்குதலை நடத்தி வருவதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

கடந்த சனிக்கிழமை இந்தப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 16 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.







### தோட்ட உட்கட்டமைப்பு வீடமைப்பு அமைச்சில்

அரசாங்க சேவைகள் தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் சமூக அபிவிருத்தி அமைச்சில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திட்ட அபிவிருத்தி உதவியாளர் -03, திட்டமிடல் உதவியாளர்-03, மனிதவளஉதவியாளர் -03, புலனாய்வு உதவியாளர் -03, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாடல் உதவியாளர் -03, தோட்டசமூகபெண்கள் வாணிபஉதவியாளர் -03 ,தோட்டவீடமைப்பு சமூக அபிவிருத்தி உதவியாளர் -02, தோட்ட சமூக தொழிற்பயிற்சி உதவியாளர் - 02, ஆகிய பணிநிலைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

மேற்படி விண்ணப்பங்களுக்கான தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்று இருப்பதுடன் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் செயலாளர், தோட்ட , உட்கட்டமைப்பு, வீடமைப்பு வசதிகள், சமூகஅபிவிருத்தி அமைச்சு 45 சென். மைக்கல் வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு 31 - 03 - 2005 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிப்பதுடன் ஒரு பதவிவகை அல்லது பலபதவி வகைகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் சமர்ப்பிக்க வேண்டியது ஒரு விண்ணப்பபடிவம் என்பது குறிப்பிடத்தக்கது.

### அபிவிருத்தி உதவியாளர்

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு உள்ளூர்கடன்அபிவிருத்தி நிதியத்தில் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமையாக அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழக மொன்றில் பட்டதாரியாக இருத்தல். கணக்கியல், முகாமைத்துவம் ,சிவில் பொறியியல், சட்டம் ,பொருளாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டதாரிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். ஆங்கிலமொழி மற்றும் கணினி அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும் வயது எல்லை 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் 2005 மார்ச் மாதம் முடிவுக்குள் பிரதம நிறைவேற்று அதிகாரி, உள்ளூர்கடன் அபிவிருத்திநிதியம், இல 174 பான்ஸ்பிளேஸ் கொழும்பு -07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

### திறன் அபிவிருத்தி உதவியாளர்

தொழில் திறன்அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் திறன்அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பக் கல்வி அமைச்சு - திறன் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் எந்தவொருதுறையிலும் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். வயதுஎல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தொழில் நிபந்தனைகளாக திறன் அபிவிருத்தி அமைச்சு தலைமை அலுவலகம், பிரதேச அமைச்சு தலைமை அலுவலகம், பிரதேச செயல்கம், மாவட்ட செயலகம் அல்லது இவ்வமைச்சின் கீழுள்ள அரச நிறுவனாங்களில் திறன்அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு வேலைகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் திறன் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படுவதுடன் 2005-04-05 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் செயலாளர் ,திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் , தொழில் நுட்பக்கல்வி அமைச்சு நிபுனதாபியச354/2 எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -05 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சேவையில் நிலவும் முகாமையாளர், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளுக்கு கீழ்காணும் தகைமை கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக முழுமையான தொழில்சார் தகைமையுடன் பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது முகாமைத்துவப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் அல்லது அங்கீகாரம் பெற்ற பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தில் ஆறுவருட தொழில்சார் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருப்பதுடன்விண்ணப்பங்களை 2005 - 04 - 02 திகதியன்றோ அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் ஆளணி முகாமையாளர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் , இல.109 டொடுண்டா டவர், கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனரமைப்புப் பணிகள் சுனாமியின்பின் தாமதம்!

## ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் புனரமைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும், தற்போது தாம் வழங்கும் உதவிகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் பரிந்துரைசெய்த மீள்கட்டுமானத் திட்டத்திற்கு இதுவரை நிதியுதவி வழங்கும் நாடுகள் அனுமதி வழங்கவில்லை.

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான புனரமைப்புகளுக்காக அரசாங்கம் 1.8 பில்லியன் டொலர்களை செலவிடமதிப்பிட்டுள்ளது. தற்போதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐந்து இலட்சம் பேர் அகதிகளாக வாழ்கின்றனர். அத்துடன், 40ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், சுனாமியால் சேதமடைந்த வீடுகளை புனரமைப்புச் செய்வதற்கு 9 மாதங்கள் வரை செல்வதுடன் வீதிகளைத் திருத்திய மைக்க 3 வருடங்கள் வரை செல்லும் எனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட நிதியமைச்சின் செயலர் பி.பி.ஜயசுந்தர- நாடு தற்போது பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதெனத் தெரிவித்தார்.

# அனைத்துபீடங்களின் மாணவர்களும் விரிவுரைகளை புறக்கணிக்கத் தயார்!

## மாணவர் ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடமாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் தமது போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு கோருமிடத்து - அனைத்துப் பீடமாணவர்களும் விரிவுரைகளை பகிஷ்கரிப்பதற்கு தயாராகவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

மருத்துவ பீடமாணவர்கள் சத்திர சிகிச்சை வகுப்புகளை மீளவும் ஆரம்பிக்குமாறுகோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்குழு நேற்று கூடிஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை,மருத்துவ பீட மாணவர்களின் கோரிக்கை நியாயமானது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன்நடவடிக்கை மேற்கொண்டு சத்திரசிகிச்சை கற்றல் வகுப்புகளை மீள ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் தெரிவித்தார்.

## நிவாரணத்தில் பாரபட்சமாம்

# திருமலையில் ஹர்த்தாலுக்கு சிங்கள அமைப்பு அழைப்பு!

(திருகோணமலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் அரசு இழுத்தடிப்புச் செய்துவருவதைக் கண்டித்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் தேரருக்கு ஆதரவு தெரிவித்து இன்று திருகோணமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு சிங்கள மக்கள் அமைப்பு இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு புறக்கணித்து வருகின்றதென்றும், இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர இருப்பிடங்களை வழங்கக் கோரியும் கடந்த நான்கு நாட்களாக திருகோணமலை - மணிக்கூண்டு கோபுரத்தடியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மகாதிபுல்வெவ பௌத்த விகாரையின் பிரதமகுரு கழுகமுவ நந்தன தேரருக்கு ஆதரவு தெரிவித்தே இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் தலைவர் நந்தன பண்டார தெரிவித்தார்.

இதேவேளை- வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ - உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் தேரரைச் சந்தித்து கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் கோரியிருந்தார்.

தனது கோரிக்கையை நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் கடிதம் தந்தபின்னரே உண்ணாவிரதத்தை கைவிடுவதாக தேரர் தெரிவித்தபோதிலும் எழுத்து மூலம் உடனடியாகக் கடிதம் தரமுடியாதென்றும் அரசாங்கத்திடம் இது தொடர்பாகக் கலந்துரையாடிய பின்னர் எழுத்து மூலம் தருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அளுநரின் உறுதிமொழியை ஏற்க மறுத்த தேரர் - தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

# கிரனேட் தாக்குதலில் ஐந்து பேர் படுகாயம்

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள வதுள்ள தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் 5 பேர் காயமடைந்தனர்.

ஓட்டோவில் வந்த இனந்தெரியா சிலர் வதுள்ள தோட்டத்தில் நின்றிருந்த கும்பலின் மீது கிரனேட்டை வீசி விட்டுத் தப்பிச்சென்றனர். இந்தத் தாக்குதலில் அங்கு குழுமியிருந்தவர்களில் ஐவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களின் வேலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியலமைப்பு சபையின் ஆயுட்காலம் முடிவுற்றது!

அரசியலமைப்பு சபையின் ஆயுட்காலம் நேற்றுடன் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. 3 வருடகால ஆயுளைக்கொண்ட அரசியலமைப்புச் சபையில் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும், சபாநாயகரும் முக்கிய மூன்று உறுப்பினர்களாவர்.

அத்துடன் அவர்கள இருவரும் ஆலோசனை மேற்கொண்டு 5 உறுப்பினர்களை நியமிக்க உரிமை கொண்டுள்ளனர். அதேநேரம் ஜனாதிபதி ஒரு உறுப்பினரை இந்தச் சபைக்கு நியமிக்கலாம். இதற்கு மேலதிகமாக சிறுபான்மைக் கட்சிகள் ஒரு உறுப்பினரைப் பரிந்துரை செய்யலாம் என்ற நியமம் வகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (01)

## கைதான உடுகம்பொல பிணையில் விடுதலை!

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவினரால் - மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சிய பரிசோதனை உட்பட ஐந்து குற்றசாட்டுக்கள் தொடர்பாகவே இவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட உடுகம்பொலவை கண்டி நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்தபோது அவரை ஐந்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

# எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்படுவதற்கு எதிர்ப்பு!

கண்டி வீதி - ஈரற்பெரியகுளத்தில் நெல்வயல் காணியில் வர்த்தகர் ஒருவருக்கு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதை ரத்துச் செய்யக்கோரி அந்தப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். ஈரற்பெரியகுளத்திலுள்ள தெற்கு பிரதேசசபை காரியாலயத்துக்கு முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள் உட்பட ஆண்கள், பெண்கள் என பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

## ஜரோப்பிய...

லின் தலைமையிலான இந்தக் குழுவில் - நெதர்லாந்து, ஜேர்மனி, அயர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் பெறுகின்றனர். (01)

## இஸ்லாமிய...

தவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நிகழ்ச்சியொன்றில் இவர் கலந்து கொண்டார். இவரது இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அங்கு பிரவேசித்த மற்றொரு இஸ்லாமியக் குழு வன்முறையில் ஈடுபட்டது. இதன்காரணமாக ஏற்பாட்டாளர்கள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

இவர் நாடு கடத்தப்பட்டமைக்கு மேல்மாகாண ஆளுநரும் ஜனாதிபதியின் முஸ்லிம் விவகார ஆலோசகருமான அலவி மௌலான பின்னணியில் இருந்ததாகவும் அவரது அரசியல் செல்வாக்கே இதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் இஸ்லாமியர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

## சந்திரிகாவுக்கு...

வர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் விஜயமாக இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை புதுடெல்கியில் தங்கியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க 8 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இது தனிப்பட்ட சந்திப்பாக அமைந்தாலும் - இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துமாறு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்கும்படி மன்மோகன் சிங்கிடம் ரணில் வலியுறுத்துவார் எனவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## நாடாளுமன்ற...

மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். பொதுக்கட்டமைப்பில் புலிகளையும் இணைத்துக்கொண்டால் அது பயங்கரவாதத்தின் கீழ் மக்களைக் கொண்டுசெல்லும் நடவடிக்கையாகவே அமைந்துவிடும்.

இவ்வாறான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளில் இருந்தே தாம் அறிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

## துணைவேந்தர் குழுவினர் கொழும்புக்குப் பயணம்!

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி ஆகியோர் அடங்கிய குழு ஒன்று இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத் தலைவரைச் சந்தித்துப் பேசுவதற்கு நேற்று கொழும்பு நோக்கிப் பயணமானது.

இவர்கள் மருத்துவபீட மாணவர்களின் போராட்டம் தொடர்பாகவும், நிறுத்தப்பட்டுள்ள சத்திரசிகிச்சை வகுப்புக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகங்கள் மீது

# நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறார் அமைச்சர்!

(கொழும்பு)

பொய்யான செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தாம் நேற்று முன்தினம் முத்தையா முரளிதரனுக்கு வாழ்த்துக்கூறியதை வானொலி ஒன்று.பிழையான முறையில் செய்தியாக்கியதாகத் தெரிவித்தார். இது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்போதே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதே வேளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பேசும்போது அரசாங்க ஊடகங்களும் இவ்வாறு செய்வதால் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (01)

## கண்ணிவெடி...

வாழ்வு, புனரமைப்பு மற்றும் இணக்கத்துக்கான அமைச்சிடம் வழங்கவுள்ளது. இதன்மூலம் வடக்கு - கிழக்கில் 2006 ஆம் ஆண்டில் நிலக்கண்ணிகளை முழுமையாக அகற்றிவிடும் நோக்கத்தை ஜப்பானிய அரசாங்கம் கொண்டுள்ளதாக ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிலக்கண்ணி அகற்றல் நடவடிக்கைகளின் போது வடக்கு - கிழக்கில் உள்ள சுமார் 640 கிராமங்களில் 1.5 மில்லியன் நிலக்கண்ணிகள் அகற்றப்படவுள்ளன. (01)

## முரளிதரன்...

கடந்த திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றது. இந்தநிலையில் முரளிதரனும் அவரது மனைவியும் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். (01)

## அரசாங்...

கள் அனைத்தையும் எதிர்ப்பதென ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. சுனாமியால் சேதமடைந்த பொது மக்களின் வீடுகளை ஆறு மாதத்துக்குள் மீள்கட்டுமானம் செய்வது இயலாத காரியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மாற்றுஇடங்களில் காணி

## அறிக்கைகோருகிறது உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு பதிலாக மாற்று இடங்களை ஒதுக்குவது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் விவசாயி ஒருவர் ஆகியோர் தாக்கல் செய்த மனு தொடர்பாகவே இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.

தமது விவசாய நிலங்களை அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட விளைநிலங்களுக்காக மாற்று நிலங்களை வழங்குவதற்குரிய நடவழ்க்கைகளுக்காக அரசாங்க அதிபரின் அறிக்கையைக் கோரியுள்ளது. (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.